விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 21 வெள்ளிக்கிழமை (05.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 76

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

## இலங்கைக்கு உதவி வழங்கலில் சீனாவே முன்னிலை வகிக்கின்றது

### திறைசேரி புகழாரம்

(கொழும்பு)

இலங்கைக்கு அதிக உதவிகளை வழங்கும் நாடாக சீனாவே திகழ்கின்றது. அது உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் கடனுதவிகளைப் பின்தள்ளியுள்ளதாக திறைசேரி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது;

2009 ஆம் ஆண்டு இலங்கைக்கு அதிக உதவிகளை வழங்கிய நாடாக சீனாவே உள்ளது. அது உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ விதிகளை மீறியமைக்காக விசாரணைகளை மேற்கொள்ள முடியும்

### இராணுவ நீதிமன்ற முன்னாள் அதிகாரி தகவல்

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்தபோது நாட்டுக்கு எதிராக சதி செய்தமை, இராணுவ விதிகளை மீறியமை தொடர்பில் முன்னாள் இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என முன்னாள் சட்ட ஆலோசகரும் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரலுமான எம்.ஜே.சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இராணுவத்தில் உள்ள அதிகாரிகள் அரசுக்கு எதிராக சதி (16 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தக் குற்றச் செயல் தொடர்பில்

# முழுமையான விசாரணை அவசியம்



## நவநீதம்பிள்ளை மீண்டும் வலியுறுத்து

(ஜெனீவா)

இலங்கையில் நடைபெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பில் அரசு முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அனைத்துலக சமூகமும் தனது உதவிகளை வழங்க வேண்டும் என ஐ.நாவின் மனித உரிமை ஆணைக் குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

(16 ஆம் புக்கம் பார்க்க)

## கொழும்பு வாக்குச் சீட்டு 2 அடி 6 அங்குலம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் சீட்டு அச்சிடும் பணிகள் நேற்று முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கப் பதிப்பகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ் வாக்காளர் அட்டையை அச்சிடும் பணிகள் ஒரு சில நாள்களில் முடிந்து விடும் என்றும் அவை விசேட பாதுகாப்புடன் இப்பணிகள் மேற் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த 18 ஆம் திகதி பதவியேற்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது 2-வது பதவிக் காலத்திற்காக எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் நேற்று ஊடகங்களுக்கு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

2005 ஆம் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அறிவிக்கப்பட்டவாறு சம்பள அதிகரிப்பு அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை

### ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்குவதாகக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட உறுதிமொழி இது வரை நிறைவேற்றப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட சம்மேளனக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை 2 ஆயிரத்து 500 ரூபாயால் அதிகரிப்பதாகவும் அதனை நவம்பர் மற்றும் டிசம்பர் மாத நிலுவைச் சம்பளத்துடன் ஜனவரி மாதத்தில் செலுத்துவதாகவும் ஜனா (16 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்ட நீடிப்பை எதிர்க்க ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் வாரம் கூடவுள்ள சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ள அவசரகாலச்சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தைத் தமது முன்னணி எதிர்க்கும் என ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஏன் அவசர காலச் சட்டத்தை நீடிக்கின்றோம் என்பதை அரசு மறைத்து வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், (16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவுச் செயலர் நாளை இலங்கைக்கு வருகை

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் இந்தியத் தூதுவரும் தற்போதைய இந்தியாவின் வெளியுறவுச் செயலாளருமான நிருபமா ராவ் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை சனிக்கிழமை கொழும்பு வருகின்றார்.

இந்தியாவின் வெளியுறவுச் செயலர் பதவியை ஏற்ற பின்னர் அவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் விஜயம் இதுவாகும். பொதுத் தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள இச் சமயத்தில் அவர் இங்கு விஜயம் செய்வதால் அவரது இந்த வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இலங்கைத் (16 ஆம் பக்கம் பார்க்க)

போரினால் சிதைக்கப்பட்ட தாயகத்தின் இயற்கை வளங்கள் அபிவிருத்தியின் பெயராலும் சூறையாடப்பட்டுவருகின்றது

இந்நிலையில், தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சூழலியலாளனும் தேவை!

| | |
|---|---|
| வீடு | X |
| 2 | X |

பொ.ஐங்கரநேசன் Msc, PGDJMC

இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!!

பழைய மாணவர்கள்-யூனிவேர்சல்



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொதுத் தேர்தல் முடிந்ததும் ஈ.பி.டி.பியின் கட்சி மாநாடு

நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் முடிபடைந்ததும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினர் தமது கட்சியின் மாநாட்டை நடத்த தீர்மானித்துள்ளதாக கட்சியின் உயர் அரசியல் பீடம் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளது. மேலும் இது குறித்து தெரிவித்தாவது,

கடந்த கால அனுபவங்களில் இருந்து அர்த்தமுள்ள படிப்பினைகளை கற்றுக்கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சமகால அரசியல் சூழல் குறித்தும் முழுமையான ஒரு ஜனநாயக சூழலுக்கு ஏற்றவாறு கட்சியை மேலும் புனரமைப்புச் செய்வது குறித்தும் கட்சியையும் மக்களையும் எதிர்கால இலக்கு நோக்கி எவ்வாறு வழி நடத்திச் செல்வது என்பது குறித்தும் தமது கோட்பாட்டு வழி நின்று மேலும் செப்பனிட்டு செல்ல வேண்டிய வரலாற்றுக் கடமையை உணர்ந்தே விரைவாக கட்சியின் மாநாட்டை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு மேலாகவே கட்சியின் மாநாட்டை நடத்துவது என்பது குறித்த தீர்மானம் தம்மால் எடுக்கப்பட்டிருந்த நிலையிலும் அடுத்தடுத்து வந்திருந்த தவிர்க்கமுடியாத சூழல்கள் மாநாட்டை நடத்துவதற்கான சந்தர்ப்பங்களைப் பின்தள்ளி வந்திருந்ததாகவும் ஆயினும் எதிர்வரும் மே மாதம் முற்பகுதியில் கட்சியின் மாநாட்டை தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் நடாத்தி முடிப்பதற்கான தயாரிப்பு வேலைகளை தாம் ஆரம்பிக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# குறிகாட்டுவான் பிரதேச அபிவிருத்திக்கு மூன்று மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு குறிகாட்டுவான் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்காக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியினால் மூன்று மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்னிலங்கையிலிருந்து வரும் உல்லாசப் பயணிகள் நயினாதீவுக்குச் செல்வதால் குறிகாட்டுவான் பகுதியில் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இதனையடுத்து அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆளுநரினால் இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியினைப் பயன்படுத்தி குறிகாட்டுவான் பகுதியில் மலசல கூடங்கள், வாகனத்தரிப்பிடம் மற்றும் பயணிகள் தங்குவதற்கான இடம் என்பன கட்டப்பட்டுவருகின்றன.

வேலணை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை என்பன இணைந்து இந்நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளன.

இதேவேளை அப்பகுதியில் 10 மலசலகூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு சேவாலங்கா நிறுவனம் முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# வயோதிபர்களுக்கு வட்டி நிவாரணம்

(கொழும்பு)

வட்டி வீதம் குறைக்கப்பட்டதனால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளில் சேமிப்பில் பணம் வைத்துள்ள 60 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு நிவாரணமாக போனஸ் வட்டி வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானம் நிறைவேற் றியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சர் என்ற ரீதியில் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி குறிப்பிட்ட சேமிப்பாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 8முதல் 10 வீதமான வட்டி வீதத்துக்கு மேலதிகமாக 20 வீத வட்டி போனஸாக வழங்கப்படவுள்ளது. அதிக கூடிய தொகையாக நபர் ஒருவருக்கு மாதத்துக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வருடத்துக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இந்தத் திட்டத்துக்கு அரசாங்கம் 120 கோடி ரூபாயை ஒதுக்கவுள்ளது. (ச-5)

## விசேட கல்வி ஆசிரியர்களிற்கான கலந்துரையாடல்

கொழும்பில் நடைபெற்ற விசேட ஒலிம்பிக் போட்டி தொடர்பாக விசேட கல்விப் பொறுப்பாசிரியர்களிற்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ச-14)


**பல்கலைக்கழக விசேட கற்கை நெறிகளுக்கான தெரிவுப் பரீட்சைக்கான வகுப்புகள்**

ஆங்கில, தமிழ்மொழி மூலம்.
ஆரம்பம் 06.03.2010 பி.ப 2.00.
சனி, ஞாயிறு 2-5 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். போதனா வைத்தியசாலை எதிரே)
(சி-4604)

**லாலா நீல சலவைத் தூள்**
பிரகாசமான சலவைத் தூள்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.
(சி-4605)

**தேவை**

காட்போட் (மட்டை), கொப்பரா, உறைபை (அரிசி, சீனி, மா, கோழித்தீன் பேக்) விலைக்கு வாங்கப்படும். (தூர இடங்களில், தொகையாக வைத்திருப்போருக்கு இலவசமாக ஏற்றி வர வாகன வசதி தரப்படும்.)
நிஹோன் டிரேடர்ஸ் (வைத்தீஸ்வரா பாடசாலைச் சந்தி)
204, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.:0716529527

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com

**Learn French the French Way French Classes**

சர்வதேச மொழியான French மொழி வகுப்புகள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.
பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கிகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரே ஒரு கலாசார, பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ALLIANCE FRANCAISE ஒரு மையமாகும்.
தொடர்ச்சியான கற்கைகளை மேற்கொள்வதன் மூலம் உள்ளக பரீட்சைகட்கும் மேலும் ஐரோப்பிய டிப்ளோமா பரீட்சையான DELF பரீட்சைக்கும் தோற்ற முடியும்.
விரிவுரையாளர்கள்: பிரான்ஸியரும், பிரெஞ்சில் தகைமை பெற்றோர்களும்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(838)

**மக்கள் வங்கி**

**யாழ்ப்பாணக் கிளைகளின் வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்**

கடந்த இரு வாரங்களில், யாழ். ஸ்ரான்லி வீதி, நாவலர் வீதி, மானிப்பாய், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, சுன்னாகம், கோப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, [illegible] ஆகிய கிளைகள், சேவை நிலையங்கள் நாடு பூராகவுமுள்ள 650 இற்கு மேற்பட்ட கிளைகள் சேவை நிலையங்களுடன் ஒன்றிணைக்கப்பட்ட கணனி வலைப்பின்னலில் இணைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
கீழே குறிப்பிடப்படும் கிளைகள் , சேவை நிலையங்கள் 08.03.2010 முதல் இவ் வேலைத்திட்டத்தில் இணைந்து நாடு முழுவதும் ஒன்றிணைக்கப்பட்ட சேவையை யாழ். மாவட்ட வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

- நாடெங்கிலும் உள்ள 650 இற்கு மேற்பட்ட கிளைகள் மற்றும் சேவைநிலையங்களுடன் உடனடியாக தொடர்பு படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் சேவை
- மத்திய வங்கிய சேவை மூலம் வேண்டியதொரு கிளையில் பணத்தை வைப்பிடும் மற்றும் மீளப்பெறும் வசதி
- சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைட், கட்டார் ஓமான் ஆகிய எமது பிரதிநிதிகள் உள்ள நாடுகள் மற்றும் வேண்டியதொரு நாட்டிருந்து ஈ-ரெமிடன்ஸ் மற்றும் ஏனைய சேவை மூலம் பணத்தினை உடனடியாக உங்கள் கணக்கிற்கு பெறும் வசதி.
- வேண்டியதொரு கிளையில் இருந்து உங்கள் கணக்கிற்கு பணத்தினை பெறும் வசதி, வேண்டியதொரு கிளையில் இருந்து மீளப்பெறும் வசதி.
- 24 மணி நேர ATM மீளப்பெறல் வசதி
- மொபிடெல் கையடகத்தொலைபேசி பாவனையாளர்களுக்கு SMS வங்கிச் சேவை



எதிர்வரும் வாரங்களில் மத்திய மற்றும் கணனி வலையமைப்பிற்குள் உட்படுத்தப்படவுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள்.

| கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் | கொடுக்கல் வாங்கல் மட்டுப்படுத்தப்பட்ட திகதியும், நேரமும் (பகல் 12.00 முதல்) | ATM செயற்படும் நேரம் (மு.ப.9.00முதல்) | கிளைகள் புதிய திட்டத்துடன் இணையும் திகதி (மு.ப.8.00முதல்) |
|---|---|---|---|
| கன்னாதிட்டி | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |
| இணுவில் | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |
| யாழ். பிரதான வீதி | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |
| உரும்பிராய் | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |
| அச்சுவேலி | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |



எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு மேற்குறித்த தினங்களில் ஏற்படும் சிரமங்களுக்கு வருத்தத்தைத் தெரிவிப்பதுடன் தாங்கள் எமக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்கிறோம்.

2008 2009 2009
www.peoplesbank.lk
மக்கள் வங்கி

# இன்று ஒரு தகவல்

## தேடல்

ஒருத்தருக்கு கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. அதற்கு என்னென்னமோ பண்ணிப் பார்த்தார். ஒன்றும் சரியாக வர வில்லை. அந்த சமயம் பார்த்து ஆதிசங்கரர் அந்த ஊருக்கு வந்தார்.

இவர் உடனே அவரிடம் சென்று, "நான் கடவுளைப் பார்க்க வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லுங்க" என்றார்.

அதற்கு அவர், "நீ தனிமையான இடத்தில் உட்கார்ந்து இறை வனை நினைத்து தியானம் பண்ணு. கடவுள் காட்சி கொடுப்பார்" என்றார்.

உடனே இவர் ஒரு காட்டுக்குப் போனார். கண்ணைமூடி உட் கார்ந்து தியானம் பண்ண ஆரம்பித்தார்.

"ஏய்... யார் நீ... இங்கே என்ன செய்கிறாய்?." என்று ஒரு குரல் கேட்டது. இவர் கண்ணைத் திறந்து பார்த்தார்.

பக்கத்தில் ஒரு வேடன் நின்று கொண்டிருந்தான். அவன் மறு படியும் கேட்டான்.

"இங்கே என்ன செய்கிறாய்?" என்றான்.

"நான் இறைவனைத் தேடி தியானம் பண்ணிக் கொண்டிருக் கிறேன்" என்றார்.

"இறைவனா? அது எப்படி இருக்கும்? சிங்கம், புலி, கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல்? எனக்குத் தெரியாமல் இந் தக் காட்டில் எதுவும் இல்லை. நீ விபரத்தைச் சொல். நான் பிடித்துக் கொண்டு வருகிறேன்." என்றார்.

அவருக்கு சங்கடமாகி விட்டது.

"இவன்.. விபரம் தெரியாத ஆளாக இருக்கிறான். தியானத் துக்கு வேறு இடைஞ்சலாக இருக்கிறான். இவனுடைய தொந்தர விலிருந்து எப்படி மீளுவது?" என்று யோசித்தார்.

உடனே அவனிடம் சொன்னார். "இதோ பாரப்பா... இறைவன் எப் படி இருக்கும் என்று கேட்டாய் அல்லவா? அதன் தலை சிங்கம் மாதிரி இருக்கும் உடம்பு மனிதன் மாதிரி இருக்கும். அதாவது மனித உடம்பில் சிங்கத்தின் தலை! எங்கேயிருந்தாலும் பார்த்துக் கொண்டு வா" என்றார்.

சரி கொண்டு வருகிறேன் என்று சொல்லி அவன் புறப்பட்டான். காலையில் புறப்பட்டவன் காடு பூராவும் தேடியலைந்தான். மாலை யாகிவிட்டது.

மிகவும் களைத்துப் போய்விட்டான்.

"நான் இந்தக் காட்டுக்கு ராஜா! என்னாலேயே கண்டுபிடிக்க முடியவில்லையே... இதன் பிறகும் நான் உயிரோடிருக்க வேண் டுமா?" என்று யோசித்தான்.

உடனே அங்கேயிருந்த ஒரு கொடியைப் பறித்தான். அதை தூக் குக்கயிறுபோல் ஒரு மரத்தில் கட்டினான். தற்கொலை செய்து கொள்வதற்காக அதில் கொண்டு போய் தலையை விட்டான்.

அந்த நேரம் பார்த்து பக்கத்தில் இருந்த ஒரு புதரில் இலேசாக ஒரு சலசலப்பு.

என்னவென்று திரும்பிப் பாத்தால் அங்கே ஒரு உருவம் நின்று கொண்டிருந்தது. அதற்கு மனித உடம்பு. சிங்கத்துடைய தலை.

"அடடா உன்னைத்தானே இவ்வளவு நேரமாக தேடிக் கொண்டி ருக்கிறேன்" என்று இறங்கி ஓடிவந்தான்.

அதை அந்தக் கொடியால் சுற்றிக் கட்டி இழுத்துக் கொண்டு அந் தப் பெரியவரிடம் வந்தான்.

"இதோ பார்... நீ சொன்ன மிருகத்தை கொண்டு வந்து விட்டேன்" என்றான்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணைத் திறந்து பார்த் தார். அந்தரத்தில் அந்தக் கொடி ஏதோ ஒரு உருவத்தை சுற்றி யிருப்பது தெரிந்தது. உடனே வந்திருப்பது இறைவன் தான் என்று புரிந்து கொண்டார். அந்தத் திசையை நோக்கி வணங்கினார்.

"இறைவா! இங்கே நான் உன்னை நினைத்து தியானம் பண் ணிக் கொண்டிருக்கிறேன். என்னை விட்டுட்டு இந்த உயிரைக் கொல்லுற வேடனுக்குக் காட்சி கொடுத்திருக்கிறாயே. இது நியா யமா?" என்றார்.

அப்போது அசரீரியாக அந்தக் குரல் கேட்டது. இறைவன் சொன்னார்.

"நீ என்னையே நினைத்தாலும் உன்னுடைய முழுமனதும் என்னி டம் வரவில்லை. ஆனால் இந்த வேடன் காலையிலிருந்து மாலை வரைக்கும் என்னை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான்.

தண்ணி கூட குடிக்காமல் முழுமனதுடன் என்னைத் தேடினான். இதுதான் உண்மையான தேடல்! அதனால் தான் அவனுக்குக் காட்சி கொடுத்தேன்." என்றார்.

இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்... எந்த ஒரு "உண்மையை "த்தேடினாலும் அப்ப டித் தேடுவது உண்மையான தேடலாக இருக்க வேண்டும் என்பது தான்.

திருவிழா நடந்து கொண்டிருந்தது. அதிக சனக்கூட்டம். ஒரு பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது. திருடனை எல்லோரும் தீவிரமாக தேடிக் கொண்டிருந்தார்கள்.

மும்முரமாக தேடிக் கொண்டிருந்த ஒருவர் சொன்னார். "எவ்வ ளவு தான் உண்மையாக தேடினால் கூட அந்தத் திருடன் கிடைக்க மாட்டான் என்று தான் எனக்குத் தோன்றுகிறது."

"எப்படிச் சொல்றீங்க?" என்று கேட்டார் பக்கத்திலிருந்தவர்.

அவர் காதோடு காதாக இவர் சொன்னார். "இப்பொழுது நாமெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறது என்னைத்தான்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## இந்து சிறுவர், முதியோர் இல்லங்களை திணைக்களத்தில் பதிவு செய்து கொள்க

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சின் அங்கீகாரத்துடன் நாட்டின் பல பாகங்களிலும் இயங்கும் இந்துச் சிறுவர் , முதியோர் இல்லங்களை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திலும் பதிவு செய்து கொள்ளுமாறு திணைக்களம் வேண்டிக்கொண்டுள்ளது.

இதன் மூலம் இந்துச் சிறுவர், முதியோர் இல்லங்கள் தொடர் பான தகவல்கள் மற்றும் தரவுகள் ஆவணப்படுத்தப்படுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என திணைக் களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 011-2552641, 011-2552642 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்அறிவித்துள்ளார். ஓ

## வடக்கில் 50 கிலோ மீற்றர் பரப்பில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணி பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் 50 கீலோ மீற்றர் பரப் பளவில் நிலக்கண்ணிவெடி அகற் றும் பணிகள் பூர்த்தியாகியுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரதேசத்தில் இருந்து பல்வேறு வகையான 847 நிலக் கண்ணி வெடிகள் மீட்கப்பட்டுள்ள தாக இராணுவத்தினர் அறிவித் துள்ளனர்.

வடக்கில் நிலக்கண்ணி வெடி அகற்றும் மனிதாபிமான மீட்புப் பணிகளில் ஆயிரம் படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் யாழ்ப் பாணம் , முகமாலை, கிளிநொச்சி , மன்னார் உள்ளிட்ட பல பகுதிகளில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணி கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றும் பணிகளை துரிதப்படுத் தும் நோக்கிலேயே நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் முனைப் புடன் மேற்கொள்ளப்பட்டு வருவ தாகக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-6)

## பிரதேச ஒருங்கிணைப்பு விவசாயக் குழுக்கூட்டம்

(பொன்னாலை)

வலி. கிழக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மற்றும் விவசாயக்குழுக் கூட்டங் கள் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை நடைபெறும் என பிரதேச செயலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இக்கூட்டத்தில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரிதிநி திகள் மற்றும் திணைக்களத் தலை வர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொண்டு தமது செயற் பாட்டுத்திட்டங்களை முன்வைக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது. (6-49)

## இராசி பலன்

05.03.2010
(மாசி 21, வெள்ளிக்கிழமை)
பஞ்சமி பிற்பகல்2.45 மணிவரை
சுவாதி பிற்பகல் 1.28 மணிவரை
இராகுகாலம் 10.56-12.26 மணிவரை
சுபநேரம் 6.26-7.56 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தெய்வதரிசனம், திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை. |
| இடபம் | பணவருவாய், சத்துரு ஜெயம், தெய்வ தரிசனம், காரிய அனு கூலம். |
| மிதுனம் | வியாபார நன்மை, தெய்வசிந் தை, தனவிரயம், பித்த ரோகம். |
| கடகம் | பயந்த சுபாவம்,தொழிலில் ஆர் வம், பெரியோர் மனஸ்தாபம், சுபசெலவு. |
| சிங்கம் | இனிய சம்பவம், வாக்கு மேன் மை, புதிய பொருள் சேர்க்கை, தெய்வ தரிசனம். |
| கன்னி | மதிப்புக் குறைவு, தொழிலில் ஆர்வம், கோபப்படுதல், தன விரயம். |
| துலாம் | தெய்வசிந்தை,பெரியோர் உதவி. நல்லமுயற்சி, சயன சுகம். |
| விருச்சிகம் | பிதாசிந்தை, உணர்ச்சி வசப் படல், காரிய அலைச்சல், சுப செலவு. |
| தனுசு | செய்தொழில் முன்னேற்றம், நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், தெய்வதரிசனம். |
| மகரம் | கடின உழைப்பு, சுபநிகழ்வு, தூரதேசச் செய்தி, தேகநலன். |
| கும்பம் | ஆன்றோர் சந்திப்பு, அதிகபிர யாசை, உஷ்ணநிலை, வீண் பயம். |
| மீனம் | வீண் தொல்லை, போசனசுகம், சயனசுகக் குறைவு, முயற்சி தாமதம். |

வளவன்

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் "கட் டடங்களை குளிர்மையாக வைத் திருப்பதற்கான வெப்பக்காவலி கள்" பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரை நடை பெறவுள்ளது.

இதில் மக்பேர்லன் பிறைவேற் லிமிட்டெட்டின் விற்பனை பொறியி யலாளர் உபதிஸ்ஸ அபயக்கோன் கலந்து கருத்துரை வழங்கவுள் ளார். (6)

## புத்தகம் கட்டும் பயிற்சிநெறி ஆரம்பம்

(பொன்னாலை)

வலிகாமம் முறைசாராக் கல் விப் பிரிவால் நடத்தப்படும் புத்தகம் கட்டும் பயிற்சி நெறி இம்மாதம் முதலாம் திகதி முதல் மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையில் நடைபெற்று வருகின்றது.

க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றிவிட்டு இருக்கும் மாணவர் கள் இக்கற்கை நெறியில் இணைந் துள்ளனர் என்றும் 17 நாட்கள் நடைபெறும் இப்பயிற்சி நெறியின் நிறைவில் சான்றிதழ்களும் வழங் கப்படும் என்றும் வித்தியாலய அதி பர் திருமதி கமலாதேவி சரவண பவன் அறிவித்துள்ளார். (6-49)




வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் கியுடெக்-கரித்தாஸ் நிறுவன அனுசரணையுடன் நடத்திய தைத்த ஆடைகளின் கண்காட்சியும் விற்பனையும் நிகழ்வில் தையல் பயிற்சியை நிறைவு செய்த மாணவி ஒருவருக்கு கியுடெக்- கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை கி.யோ.ஜெயக்குமார் சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம்.

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 120 |
| தக்காளி | 40 | 50 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 40 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 |
| கரணைக்கிழங்கு | 25 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 130 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 70 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 110 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 480 | 500 |
| போஞ்சி | 100 | 120 | 80 |
| கத்தரி தம்புள்ள | 60 | 70 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35 | 35 |

# வடக்கு, கிழக்கு முதலீடுகளால் நாட்டின் வளர்ச்சி அதிகரிக்கும்

## முதலீட்டுச் சபைத் தலைவர் தம்மிக பெரேரா தெரிவிப்பு



உலகப் பிரசித்தி பெற்ற ஒக்ஸ்வர்ட் யூனியனில் பல்துறைசார்ந்த நிபுணர்கள், அறிஞர்கள் மற்றும் கல்விமான்கள் முன்னிலையில் இலங்கை முதலீட்டு ஊக்குவிப்புச் சபை தலைவர் தம்மிக பெரேரா இலங்கையின் தற்போதைய சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் பற்றி உரையாற்றினார்.

இவர்களில் தற்போதுள்ள வாழ்வதற்கான உரிமை மற்றும் ஜீ.எஸ்.பி.பிளஸ் என்ற தலைப்பில் இலங்கையின் அனுபவமும் அறிவுமிக்க தொழில் அதிபராக அவரது அனுபவ ஆற்றலை பகிர்ந்து கொண்டார். அவர் தனது உரையில்,

வளிமண்டல மாசடைதல் போன்ற தடைகளால் எமது தொழிற்சாலையில் தடைகள் ஏற்படுத்த முயல்கின்றனர். அவ்வாறு எமது தொழிற்துறைகளை நிறுத்த எம்மால் முடியாது. அதற்கான தொழில்நுட்ப அறிவு எம்மிடம் இல்லாததுடன் அவ்வாறு தடைப்படின் அது எமது பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும். அது எமது உரிமையினை பறிக்கும் செயலாகும்.

எமது நடைமுறை செலவு குறைந்த செயற்பாடுகள் இந்த சூழலுக்கு ஓரளவேனும் மாசு ஏற்படுத்துபவைகளாக இருக்கலாம். உற்பத்தி முறை தேவைகளுக்கு, நாம் பழைய தொழில்நுட்பத்தினை உபயோகிப்பின் நாம் புதிய தொழில்நுட்ப ஆற்றலை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

கடந்த பல ஆண்டுகளாக நாம் பல சவால்களை எதிர்கொண்டோம். யுத்தம், சுனாமி, பொருளாதார சிக்கல் என அவற்றில் சிலவாகும். அவர் கடந்தகால நிலமையை அவ்வாறே விளக்கி தற்போதைய நிலவரத்தையும் உள்ளபடியே தெளிவு படுத்தினார். இலங்கை மக்களின் பொறுமை மற்றும் தன்மைகள் காரணமாகவும் மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தால் யுத்தத்தை நிறைவு செய்து ஏனைய சாவல்களையும் வென்று வருகின்றார். அவரின் புதிய பொருளாதார கொள்கைகள் மக்களுக்கு பெரிதும் உதவுவதுடன் நாட்டையும் முன்னேற்ற பாதைக்கு கொண்டு வந்துள்ளது.

கடந்த ஆறு ஆண்டுகளில் எமது தனிநபர் வருமானம் அமெரிக்க டொலர்களில் 1000 ஆகும். மேற்கூறிய கொள்கைகளால் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டு தனிநபர் வருமானம் அ.டொ.2000 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் 2015 ஆண்டளவில் இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய வெற்றி இலக்குகளை அடையவுள்ளது. நாம் குறைந்த வருமானம் உள்ள தேசத்தில் இருந்து அமைதியான நடுத்தர வருமானம் உள்ள நாடாக திகழ சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

புதிய முயற்சிகள் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை பெற எமது தேசம் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சிறந்தது. அதற்கு காரணம் முதலீடுகளுக்கும் அதன் பெறுமதிகளுக்கு எந்த நிபந்தனைகளும் இல்லை. அத்துடன் அவற்றுக்கு உத்தரவாதமும் உண்டு. 25 இற்கு மேற்பட்ட நாடுகளுடன் இலங்கை முதலீட்டு உத்தரவாத ஒப்பந்தத்தினை மேற்கொண்டுள்ளது. அத்துடன் 37 நாடுகளுடன் இரட்டை வரிச்சலுகை மேற்கொண்டுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தொடர்புகளை பேணுவது முதலீட்டு ஊக்குவிப்பு சபையாகும். அத்துடன் அது மிகவும் சிறந்த கட்டமைப்புடன் மிகவும் சிறப்பாக பணியாற்றுகிறது. இதன் காரணமாக 2005 ஆம் ஆண்டு வரை 25 ஆண்டுகள் முதலீட்டு ஊக்குவிப்பு சபை பெற்ற முதலீடுகள் கடந்த 05 ஆண்டுகளில் பெற்றுக்கொண்டது.

எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு பிரவேசம் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வெகுவாக வளர்ச்சியடையும். வடக்கு, கிழக்கின் பிரவேசம் நாட்டின் 2/3 பங்கு கடல் வளத்தை கொண்டுள்ளது. அத்துடன் 1/3 செய்கை நிலமும் அடங்கும். நாட்டு மக்களின் 15 வீத மக்களும் அங்கு வசிக்கின்றனர்.

எம்மை போன்ற சிறிய நாடுகள் சர்வதேச நாடுகளுக்கு சவாலாக இருப்பதால் பாதுகாப்பின்மையினை எதிர்கொள்கின்றோம். எமது பொருள்தாரத்திற்கு எதிர்பார்ப்பு உள்ள போதிலும் நாம் சர்வதேச பொருளாதாரத்தில் தங்கியுள்ளோம். இது தொடர்ந்தால் எமது முன்னேற்றத்தில் தடைகள் ஏற்படும்.

ஐரோப்பிய யூனியன் அழுத்தம் காரணமாக எமக்கு ஏற்படும் இழப்பினால் எம்மால் ஏனையவர்களுக்கு போட்டியாக இருக்க முடியாது.இதன் காரணமாக வேலையிழப்பு மற்றும் எமது வர்த்தகம் தளம்பல் நிலையை அடையும் எனினும் இலங்கை ஸ்திரத்தன்மையினை பேணும் என நான் நம்புகின்றேன். நாம் செய்துள்ள முதலீடுகள் மற்றும் தரம் காரணமாக எம்மால் இதை செய்ய முடியும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சுமூகமானதாக இருக்காது எனினும் எம்மால் இங்குள்ள காரணிகளை கருத்தில் கொண்டு எம்மால் குறித்த இலக்கினை அடையமுடியும் என தெரிவித்தார்.

முதலீட்டு ஊக்குவிப்புச் சபைத் தலைவர் தம்மிக பெரேரா வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதலீடுகளால் நாட்டின் பொருளாதாரம் எதிர்காலத்தில் வெகுவாக் வளர்ச்சி அடையும் என முதலீட்டு ஊக்குவிப்புச் சபைத் தலைவர் தம்மிக பெரேரா தெரிவித்தார்.




# இலங்கைக்கு விஜயம் செய்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழு சமர்ப்பித்த அறிக்கை

சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த அதிகாரிகள் குழுவின் 10 நாட்கள் விஜயத்தின் முடிவில் சர்வதேச நாணய நிதிய கொழும்பு அலுவலகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முனைவர் பிறியன் எயிற்கன் தலைமையில் பெப்ரவரி 16-25ஆம் திகதி வரை கொழும்பிற்கு விஜயத்தினை மேற்கொண்ட சர்வதேச நாணய நிதியக்குழு, 2009 ஜுலை 24ஆம் திகதி சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர் 2.6 பில்லியன் கொண்ட துணை ஒழுங்குகளின் கீழான செயலாற்றல் மற்றும் கொள்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடாத்தியது.

தூதுக்குழுவானது இலங்கை மத்திய வங்கி, நிதி திட்டமிடல் அமைச்சு, ஜனாதிபதி வரி ஆணைக்குழு மற்றும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றின் அதிகாரிகளையும் சிவில் குழுக்கள், தனியார் துறையினரின் பிரதிநிதிகளையும் சந்தித்தது.

ஒட்டு மொத்த பொருளாதார நிலைமைகள் எதிர்பார்க்கப்பட்டவாறு மேம்பட்டு வருவதுடன் பொருளாதாரம் இவ்வாண்டில் மீட்சி பெறக் கூடிய தன்மையினையும் கொண்டிருந்தது.

வெளிநாட்டு நிலுவைகள் வலுவானதாக வுள்ளன. பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் உயர்வீதத்தில் காணப்படுகின்றன. சுற்றுலா தொடர்பான வாய்ப்புக்கள் விரைந்து மேம்பட்டு வருகின்றன. மொத்த ஒதுக்குகள் வசதியான மட்டங்களில் காணப்படுகின்றன.கடந்த டிசம்பர் மாத இறுதியில் தேசிய பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் பணம் என்பனவற்றிற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட இலக்குகளை அரசாங்கம் எட்டியுள்ளது.

ஒட்டு மொத்த வரவு-செலவுத்திட்ட மீதிக்கான இறுதித் தரவுகள் இன்னமும் கிடைக்கத் தக்கதாக இல்லையெனினும் அரசாங்கத்தின் திரண்ட பற்றாக்குறை இலக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7 சதவீதத்துடன் ஒத்துச்செல்ல வேண்டிய உள்நாட்டு வரவு செலவுத் திட்டக் கடன்பாடுகள் மிதான உச்ச எல்லை கணிசமான தொகையினால் விஞ்சப்பட்டிருக்கிறது.

இது முக்கியமாக, எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவான வேகத்தில் உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை, உயர்ந்த வட்டிக் கொடுப்பனவுகள், நான்காம் காலாண்டு அரசினால் வளர்ச்சி மந்தமடைந்தமை போன்ற காரணங்களால் ஏற்பட்டதொன்றாகும்.

நாம் இப்போது முக்கியமாக வரவு- செலவுத்திட்டப்பற்றாக்குறையினை உறுதியான தொரு மட்டத்திற்கு கொண்டு வருவதில் இது கொண்டிருக்கும் தாக்கங்களை மதிப்பிட்டு வருகின்றோம்.

உயர்ந்த கடன்களும் அதேபோன்று ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கத்தில் அண்மையில் உயர்வு காணப்பட்ட போதும் நாம் இலங்கை மத்திய வங்கியின் கொள்கை நிலையின்ன தொடர்ந்து பொருத்தமானது என்றே மதிப்பிடுகின்றோம்.

வங்கிக்கடன் வளங்கள் பொதுவாகப் பழைய நிலைக்கு வரத் தொடங்கியுள்ளனமை மற்றும் பொருளாதார வளர்ச்சி அதன் உள்ளார்ந்த வளத்திற்கும் கீழ் காணப்படுகின்றமை என்பவற்றின் காரணமாக கேள்வியினால் உந்தப்பட்ட பணவீக்க அழுத்தங்கள் தோன்றக் கூடிய சிறிதொரு அறிகுறியினை நாம் காண்கின்றோம்.

மத்திய வங்கி அதன் நாணய தொழிற்பாடுகளினூடாக பாரிய வரவு செலவுத் திட்ட செலவிடலை மேலதிக திரவத்தன்மையினை உருவாக்குவாக்குதலுக்காக, நிதியிடுவதற்கு அனுமதிக்காததன் மூலம் பொருத்தமான முறையில் செயற்பட்டிருக்கும்.

அண்மைய மாதங்களில் பணவீக்கத்தில் காணப்படும் மேல் நோக்கில் போசக்கு உணவு மற்றும் ஏனைய சர்வதேசப் பண்டங்களின் விலை 2009 இன் தாழ்ந்த மட்டங்களிலிருந்து அதிகரித்தமையின் தற்காலிக விளைவுகளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

இது எமது எதிர்பார்ப்புகளுடன் ஒத்ததொன்றாக இருப்பதுடன், 2010இன் பின்னரைப் பகுதியில் அதன் பழைய நிலையினை அடைவதற்கு முன் ஆண்டின் நடுப்பகுதியளவில் உச்சமட்டத்தை அடையும்.

இத்தகைய நிகழ்வு இலங்கைக்கு மட்டுமேயுரிய தனித்துவமானதல்ல. இது தற்போது மற்றைய பல நாடுகளிலும் இடம் பெற்றுவரும் ஒன்றாகும். ஆண்டு முழுவதற்கும் நாம் சரியானதொரு பணவீக்கத்தினை உயர்வான ஒற்றை இலக்கத்தில் நிலைப்படுத்தவும் எதிர்பார்கிறோம்.

## நாணய மாற்று வீதம் -04.03.2010

| நாணயம் | வாங்கும் விலை (ரூபாய்) | விற்கும் விலை (ரூபாய்) |
|---|---|---|
| டொலர் (ஐக்கிய அமெரிக்கா) | 113.74 | 115.23 |
| பவுண் ஐக்கிய இராச்சியம் | 170.75 | 174.03 |
| யூரோ (யூரோ வலயம்) | 154.49 | 157.73 |
| பிராங்க்ஸ் (சுவிற்சர்லாந்து) | 105.23 | 108.22 |
| டொலர் (கனடா) | 109.10 | 112.32 |
| டொலர் (அவுஸ்திரேலியா) | 102.19 | 104.69 |
| டொலர் (சிங்கப்பூர்) | 80.87 | 82.54 |
| யென் (ஜப்பான்) | 1.2772 | 1.3072 |

# ஈழத்து இலக்கியமும் வரலாறும் 26

## மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்

**மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்**

மட்டக்களப்பு தேசத்தின் வரலாற்றம்சங்களை தொகுத்துக் கூறும் நூலாக அமைந்ததே மட்டக்களப்பு பூர்வ சரித்திரம். அது சென்ற நூற்றாண்டின் ஏழாவது




தசாப்தம்வரை ஏட்டு வடிவில் முடங்கியிருந்தது.

தமக்குக் கிடைத்த சில ஏடுகளை ஆதாரமாகக் கொண்டு வித்துவான் எப். எக்ஸ்.சி. நடராசா நூலின் வாசகத்தை 1962 இல் வெளியிட்டார். *மட்டக்களப்பு மான்மியம்* என்ற பெயருடன் நூல் வெளி வந்தது.

அந்தப் பெயர் பதிப்பாசிரியர் நூலுக்கு வழங்கிய பெயர். அது மூலப்பிரதிகளிற் காணப்படாதவொன்று. இலக்கண இலக்கியங்களிற் புலமை பெற்றவரான வித்துவான் பதிப்புத்துறையில் அநுபவமும் பயிற்சியும் வாய்க்கப்பெறாதவர். எனவே அவரின் பதிப்பிலே சில குறைபாடுகள்





இடம்பெற்றுள்ளன. ஆயினும், ஏடுகளைப் படித்து நூலின் வாசகத்தை ஆய்வாளருக்கும் அபிமானிகளுக்கும் கிடைத்தற்கு வாய்ப்பாக ஆற்றிய பணி போற்றுதற்குரியதாகும்.


மட்டக்களப்பு தேசத்தின் பழைய வரலாற்றை விவரிக்கும் நோக்கத்துடன் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் எழுதப்பட்டது என்பது நூலின் பெயரால் உணரப்படுகின்றது. குறிப்பிட்ட பிராந்தியத்தின் வரலாற்றை அது எந்தளவிற்குப் பிரதிபலிக்கின்றது என்பதை அறிந்துகொள்வதும் தெளிவுபடுத்துவ்துமே எமது பிரதானமான நோக்கமாகும். நூலை எழுதியவரின் பெயர் ஏட்டுச் சுவடிகளிற் காணப்படவில்லை. அதனை வேறு வழியாகவும் அறிய முடியவில்லை. நூலிலே கூறப்படுகின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் கண்டி நாயக்க மன்னராகிய ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் காலத்திற்கு முற்பட்டனவாகும். ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனைப் பற்றியோ அவனது காலத்து நிகழ்ச்சிகளைப் பற்றியோ எதுவுங் கூறப்படவில்லை.

ஒல்லாந்தரின் ஆட்சிக்கால நிகழ்ச்சி கள் பற்றிய குறிப்புகள் இடையிடையே வருவதால் ஒல்லாந்தரின் ஆட்சி நிலவிய காலத்தில் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் எழுதப்பட்டதென்று கருதலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் அது உருவாகியதென்று கொள்வதற்கான காரணங்கள் உள்ளன. அந்த வகையில் மேல் வரும் பாடற் பகுதிகள் குறிப்பிடத்தக் கவை.

மதிநுதல் ஒல்லாந்த மன்ன கேளும்
இதுவே குகன் குலமென வறிவாய்
கன்னியன் மகிழ்ந்து காவலன் றன்னை
வன்னிமைக்குலமாய்வைத்தவனாண்டான்
பெரிய கல்வெட்டு

போத்து நாட்டரசன் குகன் புகழ் பரப்பி
காத்தனர் இராசகுடும்பமாய் வைத்து
நிலைமையாய் எங்களை நிருபித்த பின்பு
தலைமையாயிருந்தோம் தாரணி மகிழ
ஒல்லாந்த அரசே உமக்கிது உரைத்தோம்.
ஆக் கொத்தனில் அரசனின் கைச்சாத்திட்டு
ஆக்கினர் கோலோந்தர் ராசனென் றெழுதி
மேஸ்தர் யீமான் வெல்லம் பல்க்
அத்தர் கோராதபயன் அங்கல்வெக்
அதிரியானிஸ் யுவானிஸ் அரசொளி
பிறாங்கே
கதி வெறு ஒல்லாந்தர் கட்டளை கொடுத்து
மட்டக்களப்பும் மண்முனைப் பற்றும்
திடப்படுத்திச் சிற்றரசாக்கி
வைத்தனனிந்த மாநகர் தன்னில்
போடி கல்வெட்டு

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் அடங்கியுள்ள பெரிய கல் வெட்டு, போடி கல்வெட்டு ஆகியவிரண்டும் ஒல் லாந்தரின் ஆட்சி ஏற்பட்ட பின்பாடப்பட்டவை என்பது மேலே கவனித்த மேற்கோள்களால் உறுதியாகின்றது. மட்டக் களப்பு பூர்வ சரித்திரம் வசன நடையிலும் செய்யுள் நடை முறையிலுள்ள பகுதிகளைக் கொண்ட நூலாகும். நூலின் முதலாவது பகுதி வசன நடையில் அமைந்துள்ளது.



இதில் இடையிடையே செய்யுள்கள் காணப்படுகின்றன. அவை எங்கிருந்து பெறப்பட்டன என்பதை அறியுமாறு இல்லை. வசன நடைப்பகுதி மட்டக்கபப்பின் பூர்வீக வரலாற்று அம்சங்களை கூறும் பகுதி போல அமைந்திருக்கிறது.செய்யுள் நடையில் அமைந்த இரண்டாவது பகுதி கல்வெட்டு என்னும் வகைக்குரிய பாடல்கள் பலவற்றைக்கொண்டுள் ளது. *குறிக்கல்வெட்டு முறை, பெரிய கல்வெட்டு, பங்கூறும் கல்வெட்டு, தாமன் கல்வெட்டு, போடி கல்வெட்டு, குல விருதுகள், சாதித் தெய்வ கல்வெட்டு, நன்மைக்கும் தீமைக்கும் கும்பவரிசை, ஆசாரிகள் கல்வெட்டு, முற்குகர் வன்னிமை, தங்குதடுக்கும் முறை* என்பன யாவும் செய்யுள் நடைப் பகுதிகளாகும். இவை எல்லாம் ஒருவரால் பாடப்பெற்றவையன்றோ ஒரே காலத்திற்குரியனவன்றோ கொள்வதற்கு ஏதுவான காரணம் எதுவும் இல்லை. அவை வெவ்வேறு விடயங்கள் பற்றியனவாக அமைகின் றன.


அவை வெவ்வேறு காலங்களை சேர்ந்தன என்று கொள்வதற்கு தகுந்த காரணம் உண்டு. வெவ்வேறான பாடல்களை மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலே தொகுத்துள்ளனர் என்றுகொள்வது சாலவும் பொருந்தும்.

யாழ்ப்பாணத்தில் ஆட்சிபுரிந்த அதிகாரியின் வேண்டுகோளுக்கமையவே யாழ்ப்பாண வைபவமாலை எழுதப்பட்டது என்பது அதன் பாயிரச் செய்யுளால் உணரப்படும். அதேபோல மட்டக்களப்பில் அதிகாரம் செலுத்திய ஒல்லாந்தர் பிரதானிகளின் தூண்டுதலினால் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் உருவாக்கப்பட்டது என்று கருதலாம்.வருமான வரிகள்,நீதிபரிபாலனம், நிர்வாகப்பதவிகள், பொதுநிர்வாகம் முதலான விடயங்களிலே இயலுமானவரையிலே தேச வழமைகளை பின்பற்றுவதே பொருத்தமானதென்று ஒல்லாந்தர் கருதினார்கள். பணச்செலவின்றியும் குடியானவர்களின் விரக்தியைத் தவிர்த்துக்கொள்ளும் வகையிலும் நிர்வாகம் செய்வதற்கும் அது அவசிய மானதென்று அவர்கள் கருதினார்கள். எனவே தேசவழமைகளையும் வரலாறு களையும் அறிந்துகொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. அத்தேவையின் நிமிர்த்தம் யாழ்ப்பாணத்திலும் பின்பு மட்டக்களப்பிலும் பிராந்திய வரலாறு பற்றிய நூல்களை எழுதுவித்தார்கள் போலத் தெரிகின்றது.

அவ்விருநூல்களுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகள் அநேகமானவை இலங்கைத் தமிழர் வரலாறு தொடர்பான

பேராசிரியர்
சி.பத்மநாதன்

மரபுவழிக் கதைகளை அடிப்படையாகக் கொண்டுஎழுதப்பட்டநூல்களில் மட்டக்களப்பு பூர்வசரித்திரம் சில தனிப்பண்புகளைக் கொண்டுள்ளது. அதிலே இலங்கையின் பூர்வகுடிகளான இயக்கர், நாகர் என்போரைப் பற்றிப் பல குறிப்புகள் வருகின்றன. இயக்கரைப் பற்றி நூல்களிற் சொல்லப் படுபவை புனைகதைகள். அவை ஆதாரமற்றவை. ஆனால் நாகர் என்ற ஓர்இனத்தவர் பூர்வகாலத்தில் இலங்கையில் வாழ்ந்தனர் என்பது மறுக்கமுடியாத ஒன்றாகும். (தொடரும்)



சாவகச்சேரி வடக்கு இலுவம் செல்வ விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக தூபி அபிஷேகம் சிவப்பிரம்மஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்களால் நடத்தப்படுவதைக் காணலாம்.

## புலம்பெயர் தமிழர் போராட்டங்களால் இலங்கையின் ஆடை ஏற்றுமதி பாதிப்பு

இலங்கையின் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியானது, புலம்பெயர் தமிழர் போராட்டங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சிங்கள இணையத்தளம் தனது ஆய்வுக் கட்டுரையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் 350 ஆடை தொழிற்சாலை இயங்குகின்றன. மூன்று இலட்சம் தொழிலாளர்கள் இந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்றார்கள். 2008 ஆம்ஆண்டு நான்காயிரம் கோடிரூபாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு இந்த அடைவினை எட்ட முடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஆய்வினையும் எதிர்வுகூறலையும் உள்ளடக்கியுள்ளதாக அந்தக்கட்டுரையானது இந்தப் பின்னடைவுக்குக் காரணம் ஐரோப்பிய ஒன்றியம் வரி சலுகையினை நிறுத்தியுள்ளமை, அமெரிக்காவில் புலம்பெயர் மக்கள் நடத்தும் இலங்கை ஆடைக் கொள்வனவு செய்வதனைப் புறக்கணிக்கும் போராட்டம், பிரித்தானியாவில் நடைபெற்ற போராட்டங்களை சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இலங்கை அரசு எப்படித்தான் சில விடயங்களை மூடி மறைத்தாலும் அல்லது சாதகமாக விவாதித்தாலும் உண்மை என்னவெனில் இலங்கை ஆடை ஏற்றுமதியில் வீழ்ச்சியினை சந்திக்கின்றது என்பதனை மாற்றவோ, மறுக்கவோ முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய சந்தைகளையும் அமெரிக்க சந்தைகளையும் இழந்து கொண்டிருக்கின்றது. இந்த இழப்புக்களுக்கு காரணமாக இன்னொரு முக்கிய காரணி இருக்கின்றது. அதாவது இலங்கை அரசாங்கம் போர்க்குற்றத்தில் ஈடுபட்டுள்ளது என்ற உலகளாவிய பிரசாரமும் குற்றச்சாட்டும் இதற்கு உதாரணமாகும்.

ஐரோப்பிய, அமெரிக்க சந்தைகள் இலங்கை ஆடைகளின் ஏற்றுமதியில் 50 விழுக்காடு நுகர்வினை உள்வாங்குகின்றன. இந்த 50 விழுக்காடு ஏற்றுமதிக்கான சந்தைகளை உடனடியாக வேறு இடங்களில் பெற்றுக் கொள்ள முடியாது. ஆசியாவில் அரசாங்கம் பெறமுடியும் என நம்புவது ,பிரசாரம் செய்வது போலியானது எனவும் அந்தக் கட்டுரை மேலும் தெரிவிக்கின்றது. (ஓ-6)

# துணுக்காய் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் மீள்குடியேற்றம்

(கொழும்பு)

துணுக்காய் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து ஏனைய மாவட்டங்களில் தங்கியிருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்து அனுமதிச்சீட்டை பெற்றவர்கள் அனைவரையும் அவர்களது சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 7 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் சொந்த இடத்திற்கு செல்வதற்கான ஆயத்தங்களுடன் வருகை தர வேண்டும்.

மேற்படி பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த மீள்குடியேற்றத்திற்காக இதுவரை பதிவுசெய்யாதவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவுசெய்து அனுமதிச்சீட்டை பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# வினாத்தாள்கள் களவாடப்பட்டமையால் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் நட்டம்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் 2008, 2009ஆம் ஆண்டு பயிற்சி பெற்று வெளியேறியவர்களுக்கென நடத்தப்படவிருந்த இறுதி பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் களவாடப்பட்டமையினால் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இறுதி பரீட்சைகள் நாடளாவிய ரீதியிலுள்ள 17 தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கடந்த முதலாம் திகதி முதல் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை நடைபெறவிருந்தன. பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டமையினாலேயே திணைக்களத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

பண்டாரவளை தேசிய கல்வியியற் கல்லூரியின் 2008,2009 ஆம் ஆண்டு பயிற்சி பெற்று வெளியேறியவர்களுக்காக நடத்தப்படவிருந்த பரீட்சை வினாத்தாள்கள் மேற்படி கல்வியாண்டிற்குரிய ஆசிரிய மாணவர்கள் சிலரால் வினாத்தாள் பொதியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு களவாடப்பட்டது.

மேற்படி கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய ஆண் ஆசிரியர்கள் 33 பேர் இவ்வாறு வினாத்தாள் பொதிகளை உடைத்து ஒவ்வொரு பொதியிலிருந்தும் ஒவ்வொரு வினாத்தாள்களை களவாடியுள்ளனர். இதனை அடுத்தே நாடுபூராவுமுள்ள 17 தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்குமான பரீட்சைகள் காலவரையின்றி பிற்போடப்பட்டன.

நாட்டிலுள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகளில் முதலாம் திகதி முதல் 5ஆம்திகதி வரை எழுத்துப் பரீட்சைகளும் 6, 7ஆம் திகதிகளில் செயன்முறை பரீட்சைகளும் இடம்பெறவிருந்தன. இதனையடுத்தே இலங்கை பரீட்சைத்திணைக்கள மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரி ஆணையாளர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டன.

ஒத்திவைக்கப்பட்டுள்ள பரீட்சைகள் மீண்டும் நடத்தப்படவிருக்கின்ற திகதிகள் மற்றும் வினாத்தாள்களை தயாரித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் திணைக்களங்களின் ஆணையாளர்கள் கூடி ஆராய்ந்து வருகின்றது. (ஓ-6)

# தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மல்வத்துபீடாதிபதி அதிருப்தி

(கொழும்பு)

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கண்டி மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்களதேரோ கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

வேட்பாளர்களின் வாகனங்களை எரித்தல், சுவரொட்டிகள் மற்றும் பதாதைகளை சேதப்படுத்தல் மற்றும் வீடுகள் மீது தாக்குதல் நடத்தல் போன்றவற்றின் மூலம் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த முடியுமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய மல்வத்து பீடாதிபதியை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்ட வேளையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார வசதி, பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளின்றி நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மக்கள் அல்லலுறுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திரத்திற்கு பின்னர் ஆட்சி நடத்திய பல்வேறு அரசாங்கங்களும் வாக்குறுதிகளை அளித்து வருகின்ற போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பது வேதனைக்குரியது எனவும் நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கப்பெற்று அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையிலும் இந்த நாட்டு அரசியல் தலைவர்கள் மக்களின் அடிப்படை தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யத் தவறியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் சுகாதாரத்துறையில் பல்வேறு சிக்கல் நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் நாட்டின் பல வைத்தியசாலைகளில் போதிய மருந்துப் பொருட்கள் கையிருப்பில் இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

விருப்பு வாக்குத் தெரிவு முறைமை இலங்கை அரசியலில் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளதெனவும் தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக பிரசார மேடைகளில் கூறுரைக்கும் பல அரசியல் தலைவர்கள் தேர்தல் வெற்றியின்பின்னர் தமது வாக்குறுதிகளை மறந்து விடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-6)


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



## அறிவித்தல்

07.03.2010 (ஞாயிற்றுக்கிழமை)

திரு.வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர லட்சுமி நாராயண மண்டபத்தில் நடைபெற இருந்த ஸ்ரீ பகவானின் 61ஆவது ஜெயந்தி விழா அன்றைய தினம் நடைபெறமாட்டாது. விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்,
யாழ். தலைமை அலுவலகம்,
மணியம்பதிலேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

T.P.: 021 222 2935
071 8565727

(A-4550)


# அங்குலானையில் இளைஞர் ஒருவரைத் தாக்கிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி நீக்கம்

(கொழும்பு)

இளைஞர் ஒருவரை தாக்கி காயப்படுத்திய அங்குலானைப் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 28ஆம் திகதி மதுபோதையில் இருந்த மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் இணைந்து மேற்படி இளைஞனை தாக்கிய சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்றதொரு சம்பவம் கடந்த வருடத்திலும் இங்கு இடம்பெற்றதுடன் அதனுடன் தொடர்புடைய இளைஞர்கள் இருவர் பொலிஸாரினால் தாக்கப்பட்ட நிலையில் பின்னர் அவர்கள் இருவரும் சடலங்களாக கவே மீட்கப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குலானை பிரதேசவாசிகள் கடந்த முதலாம் திகதி பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். இதனைத்தொடர்ந்தே கல்கிசை பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜேமந்த அதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவொன்று இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளது. இதன் முதல் கட்டமாகவே மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதவியில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# இலங்கையிலுள்ள அனைத்து பேக்கரிகள் தொடர்பான கணக்கெடுப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பேக்கரிகள் தொடர்பாக கணக்கெடுப்பொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. இதுவரை ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசாங்கமோ அல்லது தனியார் நிறுவனமோ இத்தகைய கணக்கெடுப்பொன்றை இதுவரை நடத்தவில்லை என அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர அனைத்து பேக்கரிகளதும் உரிமையாளர்கள் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தில் உறுப்புரிமை பெறுவதைக் கட்டாயமாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் முதற்கட்டத்தை கொழும்பு கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் அமுல்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-6)

# பிஜீ நாட்டுச் சட்டத்துறையில் இலங்கை நீதவான்கள், சட்டத்தரணிகள்

(கொழும்பு)

பிஜீ நாட்டு நீதிமன்றக் கட்டமைப்பில் இணைந்து சேவையாற்றுவதற்கு அதிகளவான இலங்கை நீதவான்கள் மற்றும் சட்டத்தரணிகள் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிஜீ நாட்டில் சேவையாற்றுவதற்காக சட்டத்தரணிகளும் நீதவான்களும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களை முன்வைத்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிஜீ நாட்டு பிரதம நீதியரசர் அந்தனி கேட்ஸ் நேர்முகப் பரீட்சைகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரையில் 70 பேர் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இரண்டு அல்லது மூன்று ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் சட்டத்தரணிகளும் நீதவான்களும் பணியில் அமர்த்திக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# ஹொரணையில் நீதிமன்ற முதலியார் இலஞ்சம் வாங்கி அகப்பட்டார்

(கொழும்பு)

ஹொரணை நீதவான் நீதிமன்றத்தின் முதலியார் ஒருவர் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் நீதிமன்ற வளாகத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கு ஒன்றின் தீர்ப்பு அறிக்கையை வழங்குவதற்காக மூவாயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்டபோது இந்த முதலியார் கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் சோமவீர லொக்குகே கூறினார்.

சந்தேக நபரைப் பாணந்துறை அல்லது வேறு ஒரு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதா என்பது தொடர்பாக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக அவர் குறிப்பிட்டார். (ஓ-6)

# பொலிஸ் புலனாய்வு அதிகாரி என கூறி மோசடி செய்த நபர் கொழும்பில் கைது

பொலிஸாரின் பெயரைப் பயன்படுத்தி மோசடி செய்த நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுபற்றித் தெரியவருவதாவது,

கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன யாழ்ப்பாண இளைஞர் ஒருவர் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக உறவினர்களிடம் தெரிவித்து குறித்த சந்தேகநபர் பணம் பெற்றுக் கொண்டுள்ளார்.

தம்மை ஓர் புலனாய்வுத்துறை அதிகாரியாக அறிமுகப்படுத்திய குறித்த நபர் கைது செய்யப்பட்ட இளைஞரை விரைவில் விடுதலை செய்ய ஆவன செய்வதாகவும் அதற்காக ஒன்றரை இலட்ச ரூபாவினை செலுத்துமாறும் காணாமல் போனவரின் உறவினர்களிடம் கோரியுள்ளார்.

தடுத்து வைத்துள்ள இளைஞரை விடுவிப்பதாக தெரிவித்து இரண்டு தடவைகள் 42 ஆயிரம் ரூபா பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் புலனாய்வு அதிகாரி என தம்மை அடையாளப்படுத்தி கொள்ளையில் ஈடுபட்ட குறித்த நபர் ஓர் தமிழ் இளைஞர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் புலிகளுடன் தொடர்பு என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# மருந்து வகைகளை நேரடியாகக் கொள்வனவு செய்வதால் செலவைக் குறைக்க முடியும்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

மருந்து வகைகளை வெளிநாடுகளில் நேரடியாகக் கொள்வனவு செய்வதன் மூலம் செலவைக் குறைத்துக் கொள்ள முடியுமென சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் மரு ந்து உற்பத்தி செய்யப்படும்.

நாடுகளிலிருந்து அவற்றை நேரடியாகக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அஜித் மெண்டிஸ் கூறினார்.

சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று அண்மையில் இந்தியாவுக்குச் சென்று அங்கு உற்பத்தி செய்யப்படும் மருந்து வகைகளைக் கொள்வனவு செய்து திரும்பியதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மருந்து வகைகள் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

சிறுசிறு குறைபாடுகள் காணப்பட்டபோதும் வைத்தியசாலைகளில் நிலவிய மருந்துத் தட்டுப்பாடு குறிப்பிடத்தக்களவு நீங்கியுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஓ-6)

# இடம்பெயர்ந்த மக்களின் வாக்குரிமை மறுக்கப்பட்டுள்ளது

## உச்சநீதிமன்றில் அடிப்படை மீறல் மனுத்தாக்கல்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இடம்பெயர் மக்களுக்கு தேர்தலில் வாக்களிப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்கள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொள்வதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதாக குறித்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு,வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டச் செயலாளர்கள், சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மாற்றுக்கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டாக்டர் பாக்கியசோதி சரவணமுத்து இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத்தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெயர் மக்கள் வாக்களிப்பதற்கு தேவையான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களை சமர்ப்பிக்காத காரணத்தினால் கணிசமான அளவு வாக்காளர்களுக்கு வாக்களிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணம் குறித்த அறிவிப்பினை தேர்தல் செயலகம் காலம் தாழ்த்தியே அறிவித்ததாக இடம்பெயர் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

மேலும், கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்கு உரிய நேரத்திற்கு சென்று வாக்களிப்பினை மேற்கொள்வதற்கு தேவையான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் செயலகம் மற்றும் மாவட்ட செயலகங்களின் நடவடிக்கைகளினால் இடம்பெயர் முகாம் மக்களினால் வாக்களிக்க முடியவில்லை என அடிப்படை உரிமை மீறல் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# தேர்தல் காலத்தில் வழங்கப்பட்டுள்ள இடமாற்றம் தொடர்பில் 100 முறைப்பாடுகள்

தேர்தல் காலத்தில் இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து தேர்தல் செயலகத்திற்கு 100 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் பதவி உயர்வுகளோ அல்லது இடமாற்றங் களோ வழங்கப்படக்கூடாது என தேர்தல் ஆணையாளர் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ள போதிலும் அது உதாசீனம் செய்யப்பட்டுள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முக்கிய அரச நிறுவனங்களில் இவ்வாறுஇடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.முற் திகதியிடப்பட்டு இந்த உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட பலர் இது தொடர்பில் தேர்தல் செயலகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# முல்லை மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து அரசாங்கம் அதிகூடிய கவனம் செலுத்தியுள்ளது

(கொழும்பு)

மாணவ சமூகம் கல்வித்துறையில் மேம்பாடு காண்கின்ற பொழுது அவர்களது எதிர்காலம் சுபீட்சம் மிகுந்ததாக அமையும் எனத் தெரிவித்த வன்னி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளரும் மீள்குடியேற்ற அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து அரசாங்கம் அதிகூடிய கவனத்தை செலுத்தியுள்ளதாகவும் கூறினார்.

முல்லைத்தீவு மல்லாவி மத்திய மகா வித்தியாலயத்தில் புதன்கிழமை இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசும்போது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் பேசுகையில், நாட்டில் நிலவிய அச்சம் நிறைந்த சூழ்நிலை இன்று மாறியுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தான் அதனை ஏற்படுத்தியுள்ளது.இனி மீண்டும் ஒரு யுத்தம் நாட்டில் ஏற்படாது முல்லைத்தீவு மாவட்ட மக்கள் எவ்வித அச்சமுமின்றி தமது பணிகளை ஜனநாயகமான முறையில் முன்னெடுக்க முடியும்.இப்பாடசாலையின் பல்வேறு குறைபாடுகள் குறித்து அதிபர் என்னிடத்தில் எடுத்துரைத்தார். இது தேர்தல் காலம்.எனவே அனைத்துக் குறைபாடுகளையும் உடன் நிவர்த்திப்பதாக கூறமாட்டேன்.எனினும், பாண்ட் வாத்தியக் கருவி,றோணியோ இயந்திரம்,போட்டோ கொப்பி இயந்திரம் என்பவைகளை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். எமது பிரதேசம் அபிவிருத்தி காணும்போது தான் சகல துறைகளும் முன்னேற்றமடையமுடியும். இல்லாவிட்டால் தொடர்ந்தும் நாம் பின்தங்கிய நிலையில் தான் இருப்போம்.

இந்த நிலை மாறவேண் டும்.எமது தேவைகளை நாம் உரிமையுடன் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கு ஓர் அணியில் இருந்து செயல்படும் சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது என்றார். (ஓ-6)

# இவ்வருட இறுதிக்குள் 5000 பிரான்ஸ் உல்லாசப் பயணிகள் இலங்கை வருவர்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தகவல்



(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் ஐயாயிரத்துக்கும் அதிகமான பிரான்ஸ் உல்லாசப் பிரயாணிகள் இலங்கை வருவார்கள் என அரசாங்கம் எதிர் பார்ப்பதாக ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.தமது அமைச்சில் பிரான்ஸ் உல்லாசப் பயண முகவர்களைச் சந்தித்து உரையாடி யபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது.

பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இப்போது இலங்கை வர ஆரம்பித்துள்ளனர். இவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் வழங்கிவருகின்றது என்றும் அமைச்சர் கூறினார். (ஓ-6)

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Feb.2010 To July 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.alimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(C-4527) விண்ணப்ப முடிவுத் திகதி :10.03.2010

# அமெரிக்காவில் குடியேற்றமல்லாத விசா விண்ணப்ப நடைமுறையில் புதிய இணையத்தள படிவம் அறிமுகம்

(கொழும்பு)

அமெரிக்கா செல்ல விசா பெறுவதற்கு தற்போதுள்ள குடியேற்றத்திற்கு அல்லாத விசாப் படிவங்களை ஒருங்கிணைத்த இணையத்தள படிவமாக புதியதொரு DS-160 படி வத்தை பயன்படுத்துமாறு கோர விருப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் குடியேற்றத்திற்கு அல்லாத சகல விசா விண்ணப்பதாரர்களும் எதிர்வரும் 12ஆம் திகதியிலிருந்து இணையத்தளத்தில் வெளியிடப்படும் DS-160 படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று தூதரகம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


விசா விண்ணப்ப நடைமுறைகளை மிகச் சரியாகவும் திறமையாகவும் மேற்கொள்வதற்கு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான பெரு முயற்சியின் ஒருபகுதியாக அமெரிக்க அரசாங்கம் உலகளாவிய ரீதியில்இப்புதிய படிவங்களை அறிமுகம் செய்கிறது.

கடந்த இரண்டு வருடங்களாக, தேர்ந்தெடுக்கப்பட்ட சில அமெரிக்க தூதரங்கள் பரீட்சார்த்தமாக DS-160 படிவத்தைப் பயன்படுத்தியுள்ளன. தற்போது உலகெங்கிலும் உள்ள அமெரிக்க தூதரங்கள் இப்படிவத்தைப் பயன்படுத்தி வருகின்றன.

இலங்கையிலும் மாலைதீவு குடியரசிலும் உள்ள விசா விண்ணப்பதாரர்கள் புதியDS-160 விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்ய காவற்றூதர் (கொன்சியூலர்) இலத்திரன் விண்ணப்ப நிலைய இணையத்தளத்தை https://ceac.state.gov/GVNNIV) பார்க்க வேண்டும்.புதிய படிவம் நடைமுறைக்கு வருவதுடன் விண்ணப்பதாரர் விசா புகைப்படம் ஒன்றையும் இணைக்க (அப்பலோட் செய்ய) வேண்டும். இனிமேல்விசா விண்ணப்பதாரர்கள் இலத்திரனியல் முறையில் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதால் தற்போது இருந்துவரும் கடதாசிப் படிவ நடைமுறையை DS-160 இல்லாமல் செய்து விடுகிறது.

DS-160 நடைமுறைக்கு வருவதுடன் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது கொண்டு வருவதற்காக ஒரு உறுதிப்பாட்டு தாளை மட்டும் அச்சிட வேண்டும்.

தற்போது, விண்ணப்பதாரர்கள் இணையத்தளத்தில் அவர்களது படிவங்களைப் பூர்த்தி செய்கிறார்கள். ஆனால் அவர்களது நேர்முகப் பரீட்சைக்கு முன்னதாக அவற்றை அச்சிட்டு எடுக்கவேண்டும். (ஓ-6)



கோப்பாய் சரவணபவானந்தன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாணவர்களின் அணி வகுப்பு இடம்பெறுவதையும் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இந்துப் பூசகர்களுக்கான இரண்டு வாரகால வதிவிடப்பயிற்சி

இந்து ஆலயங்களிற் பணிபுரியும் அந்தணரல்லாத இந்துப் பூசகர்களுக்கான இரண்டு வாரகால வதிவிடப் பயிற்சி நெறியொன்றை எதிர்வரும் யூன் , யூலை மாதமளவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. இந்தியப் பயிற்சியாளர்களால் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியைப் பெற விரும்பும் பூசகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முதற்தடவையாகப் பயிற்சி பெறவுள்ள 40 வயதிற்குட்பட்ட பூசகர்களுக்கே இவ்வாண்டு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கடமையுரியும் ஆலயத்தின் பெயர் -முகவரி, ஆலயம் அமைந்துள்ள கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, மாவட்டம், தொலை பேசி இலக்கம், கல்வித்தகைமை இதற்கு முன் இத்தகைய பயிற்சிகள் பெற்றிருப்பின் அவற்றின் விபரம் போன்ற விபரங்களை வரிசைக் கிரமமாக் குறிப்பிட்டு ஆலயத் தலைவர், செயலாளரின் உறுதிப்படுத்தலோடு,

**பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, கொழும்பு-04.** என்ற முகவரிக்கு இம்மாதம் 19ஆம் திக திக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **இந்து பூசகர் பயிற்சி -2010** எனக் குறிப்பிடுதல் வேண்டும் என இந்து சமய கலாசாரலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சியின் போது ஆலயப் பூஜை முறைகள், மந்திர உச்சாடனங்கள், கிரியை விபரங்கள், ஆசார அனுட்டானங்கள் ,சமய தத்துவங்கள் , பஞ்சாங்கம் கணித்தல், ஜோதிடம் பார்த்தல் போன்ற விபரங்கள் உள்ளடக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (ஓ)

# ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு

(கொழும்பு)

இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ள யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு எதிர்வரும் 13, 14ஆம் திகதிகளில் முற்பகல் 8மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தரம் 12 ,13 வகுப்புக்களுக்குரிய வணிகக்கல்வி, கணக்கீடும் தரம் 10,11 ற்குரிய வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் மற்றும் மின் ஆவணப்படுத்தல் போன்ற பாடங்களிற்கான புதிய கல்வி முறை தொடர்பாக தேசிய கல்வி நிறுவனத்தின் வர்த்தக பாட செயற்றிட்ட அதிகாரி எஸ்.கே. பிரபாகரன் விளக்க மளிக்கவுள்ளார்.

இவ் அமர்விற்கு மேற்படி பாடங்களை கற்பிக்கும் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது பங்கு பற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (6-30)

# மண்கும்பான் பிரதேசத்தில் சட்ட விரோத மண் அகழ்வு

(வேலணை)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மண்கும்பான் பகுதியில் அனுமதியின்றி சட்ட விரோதமாக மணல் உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

வேலணைப் பகுதியில் தற்போது புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு தேவையான மணலில் கணிசமான அளவு மண்கும்பான் பகுதியிலிருந்து இரவு வேளைகளிலும் விடு முறை தினங்களில் பகல் வேளைகளிலும் களவாக ஏற்றி வரப்பட்டு உழவு இயந்திரப் பெட்டி யொன்றில் ஏற்றப்படும் மணலானது ( 3/4 கியூப்) ரூபா ஐந்து ஆயிரம் ரூபாவிற்கு உழவு இயந்திர உரிமையாளர்களால் விற்பனை செய்யப் பட்டுவருகின்றது என்பது குறிப் பிடத்தக்கது.

இதுவிடயமாக சம்பந்தப்பட்டோர் கவனமெடுத்து இப்பகுதியின் இயற்கை வளங்களை காப்பாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-22)

## காலியில் கடல் தொல்பொருள் நூதனசாலை திறக்கப்பட்டுள்ளது

நாட்டின் முதலாவது கடல் தொல்பொருள் நூதனசாலை நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சரித்திர பூர்வ காலி கோட்டைக்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த நூதனசாலை கட்டடத்துக்காக நெதர்லாந்து அரசு 17 கோடியே 70 இலட்சம் ரூபாவை செலவிட்டுள் ளதாக கலாசார அமைச்சு தெரிவித்துள்ளது.

பத்து வருடங்களுக்கு முன் கடலில் சேதமடைந்த கப்பல்களின் உடைந்த பாகங்களில் இருந்து பெறப்பட்ட 500க்கும் மேற்பட்ட பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. (ஓ-6)

## கருணை இல்லமும் அதன் செயற்பாடுகளும்

கல்வியில் ஊக்கமுள்ள ஆதரவு தேவைப்படும் மாணவர்களுக்கு உதவும் நோக்கில் சிறுவர்களுக்கான கருணை இல்லம்(HOME OF MERCY FOR CHILDREN)என்னும் பெய ரில் தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்று தென்மராட்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதியுதவியை சுவிற்ஸர்லாந்தில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் சிலராலும் சுவிற்ஸர்லாந்து மக்கள் சிலராலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள **ஆலமரம்** என்னும் அமைப்பு வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதற்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர். போசகராக கே.சிவானந்தம் ,தலைவராக எஸ்.ஈழநேசன், உப தலைவராக கே. அருந்தவபாலன் , செயலாளராக என். அருட்சோதி, பொருளாளராக வி.வித்தியானந்தன் உட்பட 11 பேர் கொண்ட நிர்வாகசபை அமைக்கப்பட்டது. இவ் அமைப்பு முதல் கட்டமாக தென்மராட்சியில் உள்ள 10 பாடசாலைகளில் இருந்து தலா 4 மாணவர்கள் வீதம் 40 மாணவர்களைத் தெரிவு செய்து மாதாந்த உதவித் தொகையை வழங்க முடிவு செய்துள்ளது. (ஓ-31)

# லசந்த கொலை வழக்கு விசாரணை தொடர்பில் 15 இராணுவத்தினர் கைது

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டமை குறித்து விசாரணை நடத்தி வரும் கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் 15 இராணுவத்தினரை விசாரணைகளுக்காக கைது செய்துள்ளனர். கடந்த மூன்று தினங்களில் கைது செய்யப்பட்ட இவர்கள் இராணுவப் புலனாய்வுப்பிரிவில் பணியாற்றியவர்கள் என சிரேஷ்ட காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களிடம் லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் தனித்தனியாக விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலையுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் கொலைக்கான இரகசியத் தகவல்களை வழங்கியவர்கள் பயன் படுத்திய தொலை பேசி இலக்கங்கள் குறித்த தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனடிப்படையில் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மற்றும் இரகசியப் பொலிஸார் இணைந்து விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நுவரெலியாப் பிரதேசத்தைச் சேர்ந்த வாகனத் திருத்தகம் ஒன்றின் உரிமையாளர் ஒருவரின் அடையாள அட்டையைப் பயன் படுத்தி கை யடக்கத் தொலை பேசிக் சுனசிம்அட்டையை கொள்வனவு செய்துள்ளனர். (ஓ-6)

# கடந்த இரு மாதங்களில் டெங்கு நோயால் 8238 பேர் பாதிப்பு ; 50 பேர் மரணம்

(கொழும்பு)

இவ் வருடம் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நாடு முழுவதிலும் 8238 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 50 பேர் மரணமடைந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பலிகவதன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,டெங்கு நுளம்புகளின் தாக்கத்தினால் இவ்வருடம் ஜனவரி மாதத்தில் 4ஆயிரத்து 608 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் 35 பேர் மரணமடைந்திருந்தனர். அதேபோன்று பெப்ரவரி மாதம் 3ஆயிரத்து 630 பேர் பாதிக்கப்பட்டு 15 பேர் மரணமடைந்துமுள்ளனர்.

அதனடிப்படையில் கொழும்பு , ஹம்பகா , வவுனியா ,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் அதிகமான மரணங்களும் இடம்பெற்றுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் கடந்த 2 மாதங்களில் 464 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் 6 பேர் மரணமடைந்துள்ளனர். இவ்வாறு டெங்கு நுளம்புகளின் தாக்கம் அதிகரிப்பதற்கான பிரதான காரணம் மக்களின் கவனயீனமே ஆகும்.

டெங்கு நுளம்புகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் சுகாதார அமைச்சு தீவிர டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை நாடு முழுவதிலும் செய்து வருகிறது. அதனை மக்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அதன் மூலமே டெங்கு நுளம்புகளின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும். மாறாக சுகாதார அமைச்சினால் மாத்திரம் இதனை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது என தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## நெஞ்சை உருக்கும் ஓராண்டு நினைவலைகள்

### அமரர் சிங்கராயர் பிரதாப்



வித்தாக
தாயின் மடியில்
1988-11-24

விதியின் சதியால்
ஆண்டவன் அடியில்
2009-03-05


ஆண்டொன்று ஆனதடா?
தம்பி என்று சொல்ல நீ இல்லையே!
நெருப்பு நெஞ்சிலே எரியுதடா
விழி நீரும் அதனால் சுடுகுதையா
உன் உருவம் கண்ணில் தெரிந்திடுமோ!

ஓராண்டு நினைவில் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

4ஆம் வட்டாரம்,
மண்கும்பான் கிழக்கு,
அல்லைப்பிட்டி.

உன் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினர்.

(830)








வடமாகாண ஆளுநர் வெற்றிக்கிண்ணத்திற்கான வட மாகாண வலயங்களுக்கிடையிலான துடுப்பாட்டம், உதைபந்தாட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும், வடமாகாண் வலய அணிகளின் அணிவகுப்பு இடம்பெறுவதையும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் உரையாற்றுவதையும்,பிரதேச செயலகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை ஆளுநர் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

## பண்ணிசைப் பயிற்சிக்கு ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளரால் சங்கானை நிற்சாமம் அறநெறிப் பாடசாலை மற்றும் சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீநாக பூசணி அம்பாள் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு பண்ணிசைப் பயிற்சியை வழங்குவதற்கு ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் ஆறு மாதகாலத்திற்கு பண்ணிசைப் பயிற்சியை வழங்குவதற்காக யாழ்.வட்டு இந்து (நவோத யா)க் கல்லூரியின் இசைஆசிரியரும் சங்கீத கலாவித்தகருமாகிய திருமதி மலர்விழி கனகசபையே இவ்வாறு நியமிக்கப் பட்டவரா வார். (ஓ)

## சட்டவிரோத இறைச்சி வைத்திருந்தவரிடம் ரூபா 10 ஆயிரம் அபராதம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

மடம் வீதியில் சட்டவிரோதமாக மாட்டைக் கொன்று அதன் இறைச்சியை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து அங்கு விரைந்த பொது சுகாதாரப் பரிசோதகர் நா.இராசகுமார், அங்கு ஒரு மாட்டின் தலை, குடல், மாட்டுக்கால்களின் பகுதி, 2 கத்திகள் போன்றவற்றைக் கைப்பற்றி யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் 18164 இலக்க வழக்குத் தாக்கல் செய்தார். வழக்கினை விசாரணை செய்த நீதிபதி மேற்படி குற்றம் நிரூபிக் கப்பட்டமையினால் சம்பந்தப்பட்டருக்கு ரூபா10,000 தண்டமாக விதித்து அறவிடப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பே பெரிதும் உதவுதாகவும் பொதுமக்கள் எவ்வித தயக்கமுமின்றி தம்முடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்குமாறும் யாழ். மாநரகசபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் . வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 12, 13 இற்கு வணிகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (6-30)

## பிரதேச அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் நடைமுறைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களையும் உள்ளூராட்சி மன்றங்களையும் ஒருங்கிணைத்து பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டமிடல் நடைமுறைக்கூட்டம் நேற்று காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தின் போது ஒவ்வொரு பிரதேசங்களையும் திட்டமிட்டு அபிவிருத்தி செய்வது தொடர்பான முன் மாதிரிகள் தயாரிக்கப்பட்டன.

இதன் ஓர் அங்கமாக நேற்றைய தினம் பருத்தித்துறை, சங்கானை, வேலணை போன்ற பிரதேச செயலகங்களுக்கான தகவல் திரட்டு அனுமதிக்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. (6-30)

## சிறுவர்களுக்கான கருணை இல்ல ஆரம்ப நிகழ்வு நாளை

(சாவகச்சேரி)

சிறுவர்களுக்கான கருணை இல்ல ஆரம்ப நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட ஆணையாளர் செ.செல்வரஞ்சன், யாழ். "இறைவனின் சொந்தக் குழந்தைகள்" பதில் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி ஜசிந்தா அன்ரன், சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் வி.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி ம.மாதங்கி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-31)

## யாழ்.செய்திகள்

## எரிகாயங்களுக்குள்ளான பெண் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத் தானே தீமூட்டிக் கொண்ட இளம் கர்ப்பிணிப் பெண் ஒருவர் எரிகாயங்களுக்கிலக்கான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த க.சுமித்திரா (வயது -30) என்ற குடும்பப் பெண்ணே உடல் முழு வதும் தீக்காயங்களுக்கிலக்காகியுள்ளார். (6-30)

## புத்தகம் கட்டுதல் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் அனுசரணையுடன் யா/விக்ரோறியாக் கல்லூரியில் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை புத்தகம் கட்டுதல் பயிற்சிநெறி (Book Binding) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையிலிருந்து விலகிய மாணவர்கள் கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அதிபர் கேட்டுக்கொள்கின்றார் . (ஓ-6)

## அபிவிருத்தி நடவடிக்கையில் பெண்கள் முழுமையாக ஈடுபட முடியாதுள்ளது

### வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர்

(சாவகச்சேரி)

பெண்கள் தங்களின் உள்ளார்ந்த ஆற்றலினை முழு அளவினில் வெளிப்படுத்த முடியாத நிலையில் அவர்களினால் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முழு அளவில் பங்கேற்க முடியாதுள்ளது என்று வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த நிலையினை மாற்றி கல்வி, கலை, கலாசார, பண்பாட்டு மேம்பாட்டினில் முக்கிய பங்காளிகளாக்கும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டும் அவர்களினால் தீர்மானம் எடுக்கும் தலைமைத்துவப் பங்களிப்பினை வளர்ப்பதனை ஊக்குவிக்கும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டும் சர்வதேசமகளிர் விழிப்புணர்வு தினம் கொண்டாடப்படுவது யாவரும் அறிந்ததே.

அந்தவகையில் உள்ளூராட்சி மன்றச் செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பில் பெண்களின் கூடுதலான பங்களிப்பு வலியுறுத்தப்பட்டுவருகின்றது. இதனால் வினைத்திறனுள்ள சேவைகளை ஆற்றக்கூடியதாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பெண்களின் பங்களிப்பினை ஊக்குவிக்கும் இச் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் பங்களிப்பினை நல்கி இவ்வாறான செயற்பாடுகளினை ஊக்குவிக்க வேண்டியது ஒவ்வோர் உள்ளூராட்சிமன்றங்களின் கடமையும் பொறுப்புமாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டு வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்களை அனுப்பிவைக்குமாறு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களைக் கேட்டுள்ளார். (ஓ-29)

## புலமைப்பரிசில் வழங்கும் விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச சமுர்த்தி மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை ஆசிரியை திருமதி கௌரி சண்முகலிங்கன் மற்றும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய 49பேரும் 2008/2009 கல்வியாண்டில் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 65 பேரும் 2009/2010 கல்வியாண்டில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற இரண்டு மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளதுடன் க.பொ.த (உ/த) பரீட்சை 2010 இல் தோற்றும் 146 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஓ)

# கண்பார்வையும் இன்றி கால்களும் ஊனமான

# தாயின் ஆசையை நிறைவேற்றி திருப்தி பெறும் மகன்

(இராமேஸ்வரம்)

கண்பார்வை இல்லாத, கால்களும் ஊனமான தாயின் ஆசையை நிறைவேற்ற, அவரது மகன் டிரைசைக்கிளில் இந்தியாவில் உள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரையாக அழைத்துச் சென்றபடி, நேற்று முன்தினம் இராமேஸ்வரம் வந்தார்.

பீகார் மாநிலம் சேக்பூரா மாவட்டம், தோய்கெட் கிராமத்தைச் சேர்ந்தவர் ராம்பிரவேஷ் (50). இவரது தாய் சுமித்ராதேவி(86) பிறவியிலேயே கண்பார்வையற்று, இரண்டு கால்களும் ஊனமாகி, எங்கும் செல்ல முடியாத நிலையில், இராமேஸ்வரம் யாத்திரை செல்ல வேண்டும் என மகனிடம் தெரிவித்துள்ளார். விவசாயியான ராம்பிரவேஷ் அதிக பணம் செலவழிக்க முடியாததால், தாயின் ஆசையை நிறைவேற்றும் வகையில், பழைய டிரைசைக்கிள் ஒன்றில் கூண்டு அமைத்து, அதில் தாயை அமரவைத்து யாத்திரையாக இராமேஸ்வரம் வந்துள்ளார். கடந்த 2009 நவ. 7 இல் சொந்த ஊரிலிருந்து புறப்பட்ட இவர்கள், அயோத்தி, காசி, பிருந்தாவன், மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், ஜெகநாத்பூரி, திருப்பதி போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்றுவிட்டு, நேற்றுமுன்தினம் இராமேஸ்வரம் வந்தனர். இங்குள்ள பஜ்ரங்தாஸ் பாபா மடத்தில் தங்கி, அக்னி தீர்த்தக் கடலில் புனித நீராடி, இராமநாதசுவாமி கோயிலில் சுவாமி தரிசனம் செய்தனர். பின், கன்னியாகுமரி புறப்பட்டுச் சென்றனர்.

கோவில்களுக்குள் தூக்கிச் சென்று சுவாமி தரிசனம் செய்ய வைத்து, தாயின்



ஆசையை நிறைவேற்றி வரும் ராம் பிரவேஷ் கூறியதாவது, இராமேஸ்வரம் யாத்திரை செல்லவேண்டும் என, அம்மா பல ஆண்டுகளாக கூறியதால், அவரது ஆசையை நிறைவேற்ற டிரைசைக்கிளில் அழைத்து வந்தேன். வழியில், பொதுமக்கள் தரும் உணவை சாப்பிட்டு யாத்திரையை தொடர்ந்தோம். பலர் பொருளாதார உதவியும் செய்தனர். கன்னியாகுமரி சென்று, அங்கிருந்து துவாரகா வழியாக பீகார் சென்றோம். அதிக தூரம் டிரைசைக்கிளில் பயணம் செய்வது கஷ்டமான காரியமாக இருந்தாலும், தாயின் ஆசையை நிறைவேற்றினேன் என்ற திருப்தி உள்ளது. இவ்வாறு ராம் பிரவேஷ் கூறினார். (ஓ-6)



பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து டில்லியில் நாடாளுமன்றம் அருகே பா.ஜ. சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நாடாளுமன்றத்தை நோக்கிச் செல்ல முயன்றவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

# இந்தியர் மீது இனவெறி தாக்குதல்

# நிவர்த்தி செய்ய அவுஸ்திரேலியா திட்டம்

அவுஸ்திரேலியாவில் இந்தியர்கள் மீது இனவெறித் தாக்குதல் நடந்தது உண்மை தான். இதுபோன்ற சம்பவங்களை தடுக்க குற்றப்புலனாய்வு அமைப்பு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் நிருபர்களிடம் கூறியதாவது,

அவுஸ்திரேலியாவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தியர்கள் மீது தாக்குதல் நடந்து வருகிறது. கடந்த ஆண்டு மே மாதம் முதல் இந்த தாக்குதல் அதிகரித்துள்ளது. ஒரு சிலர் இந்த தாக்குதலில் இறந்துள்ளனர். டில்லி வந்துள்ள அவுஸ்திரேலிய அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் நிருபர்களிடம் கூறியதாவது.

அவுஸ்திரேலியாவில் இந்தியர்கள் மீதான தாக்குதலில் இனவெறிக்கான உள்நோக்கமும் உள்ளது என்பதை ஒப்பு கொள்கிறோம். இதற்கான காரணத்தை குற்றப் புலனாய்வு அமைப்பு மூலம் ஆராய்ந்து வருகிறோம். முற்றிலும் இது போன்ற சம்பவங்களை களைய நடவடிக்கை முழு வீச்சில் எடுக்கப்பட்டுள்ளது.

வன்முறையை நாங்கள் அறவே வெறுக்கிறோம். இதுபோன்ற தாக்குதலால் இந்தியர்கள் மத்தியில் அவுஸ்திரேலியாவின் மதிப்புக் குறைந்துள்ளது. இதை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இந்தியாவுடனான உறவை மேலும் பலப்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். இந்தியர்களை தாக்குபவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள். தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மீது விசாரணை நடக்கிறது என்று தெரிவித்தார். (ஓ-6)

# பாகிஸ்தான் பிரச்சினை குறித்து

# பிரதமர் -அத்வானி கருத்து மோதல்

பாகிஸ்தான் பிரச்சினையில் பாரதீய ஜனதா தலைவர் அத்வானி, பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் இடையே பாராளுமன்றத்தில் கருத்து மோதல் ஏற்பட்டது.

ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விவாதம் நடந்தது. இதில் கலந்து கொண்ட, பாரதீய ஜனதா தலைவர் அத்வானி பேசுகையில், "பாகிஸ்தான், இந்தியா இடையே உள்ள பல்வேறு பிரச்சினைகளில் வெளிநாடுகளின் தலையீடுகளை ஏற்கக்கூடாது. சமீபத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் வெளிநாட்டு செயலாளர்கள் சந்தித்துப் பேசியதே, அமெரிக்காவின் வற்புறுத்தல் காரணமாகத்தான்'' என்று குற்றம்சாட்டினார்.

அப்போது பிரதமர் மன்மோகன்சிங் குறுக்கிட்டு, ''பாகிஸ்தானுடன் நடந்த பேச்சுவார்த்தைக்கு, அமெரிக்காவின் நெருக்கடி காரணம் அல்ல. இந்தியா-அமெரிக்கா இடையே உள்ள உறவில், அமெரிக்க அதிபராக ஒபாமா பதவி ஏற்றபின், எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

பாகிஸ்தான்-இந்தியா இடையே உள்ள பிரச்சினைகளில் இருநாடுகளும் விரும்பாத வரை அமெரிக்கா தலையிடாது என்று ஒபாமா ஏற்கனவே நாங்கள் சந்தித்த போது உறுதியளித்து இருக்கிறார்'' என்று தெரிவித்தார்.

பிரதமர் மன்மோகன்சிங் மேலும் பேசுகையில், "காஷ்மீர் பிரச்சினையில், பாகிஸ்தானுடன் இந்தியாவுக்கு எந்த இரகசிய ஒப்பந்தமும் கிடையாது. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி நடந்தபோதும், பாகிஸ் தானுடன் பல தடவை பேச்சு நடத்தி இருக்கிறீர்கள். ஒருமுறை கூட, பேச்சு விவரங்கள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இப்போது மட்டும் பேச்சு விபரத்தை தெரிவிக்க கேட்பது சரியா?'' என்றும் கேட்டார்.

பின்னர் தொடர்ந்து பேசிய அத்வானி, ''மும்பை குண்டுவெடிப்பு சம்பவத்தில் போதிய ஆதாரங்களை இந்தியா கொடுத்தும் அவற்றை ஏற்க பாகிஸ்தான் மறுக்கிறதே. அப்படி இருக்கும்போது தொடர்ந்து பாகிஸ்தானுடன் பேச்சு நடத்துவதில் என்ன பயன்?'' என்றார்.

இதற்கு பதில் அளிக்கையில், "இது குறித்தும்பேச இருக்கிறோம். பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைகளை தீர்க்கவேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம்'' என்றார்.

ஒரு கட்டத்தில், ''நீங்கள் பிரச்சினைகளை திசைதிருப்புகிறீர்கள்'' என்ற மன்மோகன்சிங், அத்வானி மீது குற்றம் சாட்டினர். அதற்கு அத்வானி, நான் திசை திருப்பவில்லை. பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் மகிழ்ச்சி அடை வேன் என்றார்.

பாகிஸ்தானில் இயங்கிவரும் 700 தீவிரவாதமுகாம்கள், இந்தியாவில் சர்க்கரை விலை உயர்வு, இராணுவத்தினருக்கு பென்சன் போன்ற பல்வேறு பிரச்சினைகளில் அரசின் செயல்பாடுகளையும் தாக்கி பேசினார் அத்வானி. (ஓ-6)

## பாரதச் செய்திகள்

# பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசுக்கு

# நக்சலைட்டுக்கள் 3 நாட்கள் கெடு விதிப்பு

(கொல்கத்தா)

பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசுக்கு நக்சலைட்டுக்கள் 3நாட்கள் கெடு விதித்துள்ளார். இதுகுறித்து நக்சலைட்டு தலைவர் கிசன்ஜி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மத்திய அரசு பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்ததை அடுத்து நாங்கள் அதற்கு சம்மதம் தெரிவித்தோம். போர் நிறுத்தமும் அறிவித்தோம். மேற்கொண்டு எங்களுடன் பேசுவதற்காக எங்களுடைய தொலைபேசிஎண்ணையும் கொடுத்தோம். ஆனால் அவர்கள் இந்த தொலைபேசி எண்ணில் இதுவரை பேசவில்லை. அவர்களுக்கு 6ஆம் திகதி வரை 3 நாட்கள் கெடு விதிக்கிறோம்.

அதற்குள் எங்களுடன் பேசவில்லை என்றால் வேறு முடிவுகளை எடுக்கவேண்டி வரும். மத்திய அரசுக்கு உண்மையிலேயே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அக்கறை இல்லை. இதனால் தான் இதுவரை எங்களுடன் பேசவில்லை.

அத்துடன் போர்நிறுத்தம் அறிவித்த பிறகு எங்கள் முன்னணித் தலைவர் வெங்கடேசுவர ரெட்டி என்கிற தீபக்கை கைது செய்துள்ளனர். பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றால் தீபக்கையும் எற்கனவே கைது செய்யப்பட்ட முன்னணி தலைவர்களையும் நிபந்தனையின்றி உடனே விடுவிக்கவேண்டும்.

மத்திய அரசுடன் உட்கார்ந்து பேசத் தயாராக இருக்கிறோம். பேச்சுவார்த்தை தொடர்வது அவர்கள் கையில்தான் உள்ளது. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஓ-6)

# இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு

# தீவிரவாத அச்சுறுத்தல்

(புதுடில்லி)

இந்தியாவில் உள்ள பல்வேறு இஸ்ரோ மையங்கள் மற்றும் அவற்றில் பணியாற்றும் விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகளுக்கு தீவிரவாதிகள் குறி வைத்து இருப்பதாக பாராளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது. டெல் மேல் சபையில் இது தொடர்பான கேள்விக்கு மத்திய உள்துறை இணை மந்திரி அஜய் மாகன் எழுத்து பூர்வமாக பதில் அளித்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது,

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இஸ்ரோ மையங்கள் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி விஞ்ஞானிகள் மீது தாக்குதல் நடத்த ஒரு தீவிரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளதாக மத் திய பாதுகாப்பு ஏஜென்சிகளுக்கு உளவுத்துறை தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே 8 விஞ்ஞானிகளுக்கு தீவிரவாத அச்சுறுத்தல் அடிப்படையில் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

அதுபோல இஸ்ரோ விஞ்ஞானிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 3 காலனிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. பெங்களூரில் உள்ள இஸ்ரோ மையங்களில் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் அந்தந்த மாநில அரசுகளும் பாதுகாப்பு குறித்து உஷார்ப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த பதிலில் மத்திய மந்திரி தெரிவித்துள்ளார். (ஓ-6)



ஐதராபாத்தில் நடைபெற்ற விமான சாகச நிகழ்ச்சியின் போது விமானம் எதிர்பாராதவிதமாக கட்டடம் மீது மோதியதில் கட்டடம் பலத்த சேதமடைந்தது. இந்தவிபத்தில் 2பேர் பலியாயினர், 4பேர் படுகாயமடைந்தனர்.

# பிரவீண் மகாஜன் மரணம்



பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் பிரமோத் மகாஜனை சுட்டுக்கொன்ற அவருடைய தம்பி பிரவீண் மகாஜன்(50) தானே மருத்துவமனையில் கடந்த புதன்கிழமை மரணம் அடைந்தார்.

மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். அவருக்கு மனைவி, மகன், மகள் உள்ளனர். 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி பிரமோத் மகாஜன் கொல்லப்பட்டார்.

பொலிஸ் நிலையத்துக்கு பிரவீண் மகாஜன் நேரில் சென்று சரண் அடைந்தார்.

2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி பிரவீண் மகாஜனுக்கு செஷன்ஸ் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறியது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டபின் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சோதித் ததில் அவருடைய மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. (6)

# உகண்டாவில் மண்சரிவுகளில் சிக்கி 300க்கும் அதிகமானோர் உயிரிழப்பு

(கம்பலா)

உகண்டாவின் புகுடா பிராந்தியத்திலுள்ள மலைப் பகுதியில் அடை மழை காரணமாக இடம்பெற்ற தொடர் மண்சரிவுகளில் சிக்கி 300 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

ஒரு கிராமத்திலுள்ள விற்பனை நிலையமொன்று தரைமட்டமாகியுள்ளதுடன் பெருந்தொகையான கடைகளும் வீடுகளும் மண்ணில் புதையுண்டுள்ளன.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட கிராமங்களை அணுகுவது சிரமமாகவுள்ளதால் மீட்பு பணிகள் தாமதப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் மேற்படி பாதிக்கப்பட்ட பிராந்தியத்துக்கு அந்நாட்டு அனர்த்த நிவாரண அமைச்சா மூஸா எக்வெறு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

மண்சரிவை எதிர்கொண்ட பிரதேசம் மிக பின்தங்கிய நிலையிலுள்ள பிராந்தியமாக உள்ளதால் இச்சடலங்களை முறையாக நல்லடக்கம் செய்வதற்கு 100 சவப்பெட்டிகளை அரசாங்கம் வழங்கியுள்ளதாக எக்வெறு கூறினார்.



இந்த மண்சரிவில் உயிர் தப்பிய ஜேம்ஸ் கஸாவில் விபரிக்கையில்; பூமியதிர்ச்சி இடம்பெற்ற போது நான் தேவாலயமொன்றில் இருந்தேன். தேவாலய கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது. அனைத்து இடமும் மண்ணால் மூடப்பட்டது. எனக்குப் பக்கத்திலிருந்த 5 பேரும் உயிரிழந்தனர். எனது தலைக்கு மேல் மண் மூடாததால் நான் மட்டும் உயிர் பிழைத்தேன் என்று கூறினார்.

தலைநகர் கம்பலாவின் வடக்கு-கிழக்கே 275 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிராமமே மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# ஈராக்கில் தற்கொலைப் படைத் தாக்குதல் 33 பேர் பலி; 55 பேர் படுகாயம்

(பகுபா)

ஈராக்கில் நேற்று முன்தினம் மூன்று இடங்களில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் 33 பேர் குண்டுவெடித்துப் பலியாயினர்.

ஈராக்கில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலை சீர்குலைக்க அல்கொய்தா பயங்கரவாத அமைப்பு முடிவு செய்துள்ளது. தலைநகர் பாக்தாத்திலிருந்து 60 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பகுபா நகரில் நேற்று முன்தினம் மூன்று இடங்களில் தற்கொலைப் படையினர் வெடிகுண்டு தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 15 பொலிசார் உட்பட 33 பேர் பலியாயினர். 55 பேர் படுகாயமடைந்தனர். வெடிகுண்டு நிரப்பப்பட்ட கார்கள் பகுபா நகரின் இரண்டு பொலிஸ் நிலையங்களின் மீது மோதி பெரிய சேதத்தை ஏற்படுத்தின.

மூன்றாவதாக பகுபா நகரின் மத்திய மருத்துவமனை மீது தற்கொலைப் படை பயங்கரவாதி தன் உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். இதனால் மருத்துவமனையின் ஒரு பகுதி சேதமடைந்தது. இந்த மூன்று தாக்குதல்களையும் பொலிஸ் உடையில் வந்த பயங்கரவாதிகள் நடத்தியுள்ளனர். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களால் பகுபா நகரில் ஊடரங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

# வேலையற்றவர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டத்திற்கு அமெரிக்க செனட் ஆதரவு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வேலையின்றித் தவிக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்திற்கு அந்நாட்டு செனட் உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான நடைமுறைகளில் அதிபர் ஒபாமா விரைவில் கையெழுத்திடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்க வெள்ளை மாளிகையில் இருந்து அதிபர் ஒபாமா வெளியிட்ட அறிக்கையில்; தற்போதைய கடும் பொருளாதார சூழ்நிலைகளில் அமெரிக்கப் பணியாளர்கள், அவர்களின் குடும்பத்தினர், சிறிய வர்த்தகர்கள் ஆகியோரை பாதுகாப்பதில் தீவிர கவனம் செலுத்தவேண்டும். அமெரிக்காவில் வேலையில்லாதவர்களுக்கு நிதியுதவி வழங்க இந்த தடையை நீக்க இருபக்கத்தைச் சேர்ந்த செனட் உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (ஓ-6)




# கிரேக்க அரசு நாட்டின் சிக்கன நடவடிக்கை குறித்து அறிவிப்பு

(எதென்ஸ்)

கிரேக்க நாட்டு அரசு 6.5 பில்லியன் டொலர்கள் பெறுமதியான சிக்கன நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. இது நாட்டின் கடன் நெருக்கடியின் முழு அளவும் வெளிவந்ததிலிருந்து அது எடுக்கும் மூன்றாவது நடவடிக்கையாகும்.

சிக்கன நடவடிக்கைகளில் ஓய்வூதியங்கள் அதிகரிக்காமல் கட்டுக்குள் வைப்பது, விற்பனை வரி உயர்வு, அரசு அதிகாரிகளின் ஊதிய வெட்டு ஆகியவை அடங்கும்.

இந்த சீர்திருத்தங்களுக்கு எதிராக எதென்ஸில் ஓய்வூதியம் பெறுவோர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

ஆனால் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஜோஸ் மானுவல் பரோசோ இந்த அறிவிப்பை வரவேற்று இந்த நடவடிக்கைகள் யூரோ நாணயத்தை ஏற்றுக் கொண்ட ஐரோப்பிய நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு முக்கியமான ஒன்று என்று கூறினார். (ஓ-6)



கிரேக்க நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார தேக்க நிலையால் பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் தலைநகர் எதென்சில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# பாலஸ்தீன பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அரபு லீக் ஆதரவு

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனர்களுக்கிடையே மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் பிரேரணை ஒன்றிற்கு ஆதரவு தர அரபு லீக் உடன்பட்டுள்ளது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகூ அரபு லீக்கின் இந்த ஒப்புதலை வரவேற்றுள்ளார்.

ஒரு ஆண்டுக்கு மேலான காலத்துக்கு முன்னர் காசாவில் இஸ்ரேலியத் தாக்குதலை அடுத்து நிலவிய முட்டுக்கடை நிலையை உடைக்க மறைமுகப் பேச்சுவார்த்தைகளை அமெரிக்கா பிரேரித்திருந்தது.

அதிலிருந்து இந்தப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன.

யூதக் குடியிருப்புக்கள் கட்டப்படுவதை நிறுத்தவேண்டும் என்று பாலஸ்தீனர்கள் கோரி வருகிறார்கள். இஸ்ரேலியர்களோ இதை தற்காலிகமாக நிறுத்துவதையே முன் வைக்கிறார்கள். (ஓ-6)

# இந்தியர்களை குறிவைத்தே தாக்குதல் காபூல் படுகொலை குறித்து தகவல்

(வோஷிங்டன்)

காபூலில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் இந்தியர்களைக் குறிவைத்துத்தான் வந்துள்ளனர் என்றும் அந்த இந்தியர்கள் யார் என்று தெரிந்து கொண்டுதான் வந்தனர் என்றும் வோஷிங்டனிலிருந்து வெளியாகும் பத்திரிகை தெரிவித்துள்ளது.

காபூலில் உள்ள இரண்டு ஹோட்டல்களில் சமீபத்தில் பயங்கரவாதிகள் புகுந்து குண்டு வீசித் துப்பாக்கியால் சுட்டுப் பலரைக் கொன்றனர். இவர்களில் ஆறு பேர் இந்தியர்கள். ஒருவர் இத்தாலியர். ஒருவர் பிரான்ஸ் நாட்டின் சினிமா தயாரிப்பாளர். மூன்று ஆப்கான் பொலிஸ் அதிகாரிகள். பொது மக்கள் நால்வர். ஒரு அடையாளம் தெரியாத நபர் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இந்தப் பயங்கர சம்பவம் குறித்து ஆப்கான் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கூறியதாக தி வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் கூறியிருப்பதாவது; காபூலில் தாக்குதல் நடத்த வந்தவர்களில் நான்கு பேர் பெண்களைப் போல பர்தா அணிந்தபடி அதற்குள் ஆயுதங்களை மறைத்துக் கொண்டு வந்துள்ளனர். அவர்களில் ஒருவன் வெடிபொருட்கள் நிறைந்த வானுக்குள் மறைந்து கொண்டான். மற்ற மூவரும் இரண்டு ஹோட்டல்களில் புகுந்துள்ளனர். ஆப்கான் புலனாய்வுப் பிரிவு செய்தித் தொடர்பாளர் சயீது அன்சாரி கூறுகையில்; சம்பவம் நடக்கத் தொடங்கிய பின் ஆப்கான் தலிபான் செய்தித் தொடர்பாளர் ஒருவர் அசோசியேட்டட் பிரஸ்சுக்கு போன் செய்து சம்பவத்துக்கு தலிபான்கள் பொறுப்பேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால் வந்தவர்கள் பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.யோடு தொடர்புடைய லஷ்கர் - இ - தொய்பா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. குறிப்பாக அவர்கள் ஹோட்டலுக்குள் புகுந்தவுடன் எங்கே அந்த இந்திய இயக்குனர்? என்று கத்தியபடி வந்தனர். மற்ற இருவரும் இந்தியர்களைத் தான் தேடினர். அவர்கள் தலிபான்களாக இருந்தால் அவர்களுக்கு இந்தியர்களைத தெரிய வாய்ப்பில்லை என்று தெரிவித்துள்ளார்.

(ஓ-6)

# 24 மணி நேரமும் செயற்படும் ஆளில்லா மின்னணு நூலகம்

## டுபாயில் ஆரம்பித்து வைப்பு

(டுபாய்)

புத்தக விரும்பிகள் பயன்பெறும் வகையில் 24 மணி நேரமும் செயற்படும் ஆளில்லா மின்னணு நூலகம் டுபாயில் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புத்த விரும்பிகள் எந்த நேரத்திலும் நூலகத்திற்கு வரவும் புத்தகங்களை பயன்படுத்தவும் முடியும்.

பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள், சி.டி., டி.வி.டி., ஒலி நாடாக்களை இந்த நூலகத்திலிருந்து பெற முடியும். நூலகத்திலுள்ள வாங்கும் மையம் மூலம் புத்தகங்களைப் பெறலாம். புத்தகங்களை எடுப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் மின்னணு அடையாளக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

இதனால் இந்த நூலகத்தைப் பயன்படுத்த யாருடைய உதவியும் தேவைப்படாது. இதுபோன்று மேலும் பல புதுமையான வசதிகள் கொண்ட நூலகங்கள் எதிர்வரும் காலங்களில் ஏற்படுத்தப்படும் என அங்குள்ள நூலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ-6)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# கடல்வாழ் உயிரினங்களில் குதிரைலாட நண்டுகள்

குதிரைலாடம் போன்ற கவசத்தை முதுகுப்புறமாகக் கொண்டு இருப்பதனால் குதிரை லாட நண்டுகள் (Horse-Shoe-Crad) என அழைக்கப்படும். இக் கடல்வாழ் முள்ளந்தண்டிலிக் கூட்டம் விலங்கு இராச்சியத்தில் கணம்: மூட்டுக்காலிகளில் (Arthropoda) உபகணம்: Chelicerataவில் உள்ளடக்கப்படுகின்றன.

பெயரில் நண்டுகள் எனக் கொண்டிருந்தாலும் பாகுபாட்டிலில் நண்டுகளைவிட சிலந்திகள், தேள்களுடனேயே நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன.

இவை அண்ணளவாக 230 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் Triassic காலத்தில் தோற்றம் பெற்றுள்ளதுடன் பல்லாயிரம் வருடங்களாக தோற்றத்தில் மாற்றம் ஏற்படாத விலங்கினமாகும். இதனால் வாழும் உயிரிச்சுவடுகளாக (Living Fossils) அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் புவியிலிருந்து முற்றாக அழிவடைந்த Trilobites உடன் நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளன.

முதுகுப்புறத்தில் கவசம் காணப்படுவதால் வாய், தூக்கங்கள் (5 சோடிகால்கள்), புத்தக-பூ/நுரையீரல் (bookgills) எனும் சுவாச அங்கம் என்பன வயிற்றுப்புறமாகக் காணப்படும்.

பெண் நண்டு ஆணைவிட சற்றுப் பெரியது. இவை பொதுவாக சாம்பல் கலந்த பச்சை அல்லது கடும் கபில நிறத்தில் காணப்படும்.

### வாழ்விடமும் பரம்பலும்:-

இவை அடித்தள வாழிகளாகும். பொதுவாக அமைதியான கடலை/ கழிமுகத்தை அண்டிய சேற்றுப்பாங்கான கடலை வாழிடமாகக் கொண்டுள்ளன. எனினும் சில சமுத்திரங்களிலும் காணப்படும். ஆனால் இனப்பெருக்க காலத்தில் கடற்கரையை நாடும்.

உலகளாவிய ரீதியில் 4 பிரதான இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**Limulus Polyphemus**

இவை அமெரிக்காவின் அத்திலாந்திக் கரையோரம், மெக்சிக்கன் வளைகுடாவின் கரையோரம் முதல் Yucaton குடாவின் தென்பகுதிவரை காணப்படும்.

**Tachypleus triclentatus**

இவ்வினம் ஆசியாக்கண்டத்தின் கரையோரத்தில் குறிப்பாக ஜப்பானின் மேற்கு மற்றும் தெற்கு கரையோரங்கள், வியட்னாம், சீனா, தாய்வான், பிலிப்பைன்ஸ், வடபோர்ணியோ மற்றும் சுமாத்திரா தீவின் இந்தியப் பெருங்கடல் பக்கம் என்பவற்றில் காணப்படுகிறது.

**Carcinosscorpius Rotundicauda**

இவ்வினம் மலேசியாவின் கரையோரம், தாய்லாந்தின் கரையோரம் மற்றும் இந்தியாவின் ஒரிசா மாநிலத்தின் கரையோரம் என்பவற்றில் காணப்படுகிறது.


**Tachypleus gigas**

இவ்வினம் மாலே குடா, சிங்கப்பூரின் மேற்குப்பகுதி, இந்தியாவின் ஒரிசா மாநில கரையோரம், சீனக்கரையோரம் மற்றும் போர்ணியோ, யாவா தீவுகளை சுற்றிலும் காணப்படுகிறது.

குதிரைலாட நண்டுகள் அடித்தளத்திலுள்ள சிப்பிகள், அனலிட்டுக்கள் போன்றவற்றை உணவாக எடுக்கின்றன.

### இனப்பெருக்கம்:-

இவற்றில் T. gigas வருடம் முழுவதும் இனம் பெருகக் கூடியது. இவை மணற்பாங்கான கடற்கரையில் உயர்நீர் மட்டத்தில் (high water mark of tide) அமாவாசை மற்றும் பௌர்ணமி தினங்களில் புணர்ச்சியில் ஈடுபடும். இக்காலங்களில் பல்லாயிரக் கணக்கான நண்டுகள் கரையை நோக்கி இடம் பெயரும். பின்னர் மண்ணில் குழிகளை



Dorsal View
முதுகுப்புறத் தோற்றம்



ஏற்படுத்தி அதில் முட்டை இடும். முட்டையில் இருந்து வெளிவரும் Trilobite larva உடனடியாக கடலின் கரையை அண்டிய பகுதிக்கு நகரும். இவை சிறிய இருவால்விகளையும் (bivalves) உக்கலையும் பிரதான உணவாக உட்கொள்ளும்.


இவற்றின் வளர்ச்சி வீதம் மிகவும் குறைவாகும். பொதுவாக ஆண் முதிர்ச்சியடைய 9-10 வருடங்களும், பெண் முதிர்ச்சியடைய 10-11 வருடங்களும் எடுக்கும். வளர்ச்சிப்பாதையில் வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே தமது புறவன் கூட்டை கழற்றுவதுடன் (Molting) பருவ முதிர்ச்சியின் பின்னர் ஒரு போதும் கழற்றுவதில்லை.

### உயர் மருத்துவ முக்கியத்துவங்கள்:


இவற்றின் குருதியிழையமே உயிரியல் மருத்துவ ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். குருதி haemocganin எனும் நிறப்பொருளை உடைய நீல நிறமானது. அத்துடன் தெளிவான கருவை உடைய குருதிக்கலங்களையும் Lectin எனும் புரதத்தையும் கொண்டிருக்கும்.

### முக்கியத்துவம்:

மனிதனில் உணவுக்கால்வாயில் காணப்படும் gram(-)ve பக்ரீரியாக்களின் சுக நஞ்சுகள் மனிதனது குருதியில் கலந்தால் உடலின் அனுசேபச் செயற்பாடு கள், ஓமோன்களின் தொழிற்பாடு, மூளை மற்றும்



வயிற்றுப்புறத் தோற்றம்


புற ஓட்டைக் கழற்றும் நிலை

குருதிக் கலன்களின் தொழிற்பாடு கள் என்பன பாதிக்கப்படும். குருதியில் இவ் வகை பக்ரீரியாக்களின் பிரசன்னமானது தற்போது முயலில் இருந்து பெறப்படும் Vaccine மூலமே அறியப்படுகின்றது. ஆனால் பிரதிகூலம் யாதெனில் அதிகளவு முயல் கள் கொல்லப்படுகின்றன.

தற்போது குதிரைலாட நண்டுகளின் குருதியிலுள்ள அமீபக்குழியங்களின் பிரத்தெடுப்பின் மூலம் (Limulus Amoebayle lysate (LAL) பக்ரீரிய அகநஞ்சுகள் துல்லியமாகக் கண்டறியப்படுகின்றது.

LAL பரிசோதனையானது முதன் முதலில் இந்திய-அமெரிக்க விஞ்ஞானியான Dr.Nandkanஆல் 1956இல் கண்டறியப்பட்டது. இதன் முக்கியத்துவம் யாதெனில் அக



**திருமதி துளசிதா வில்லியம்ஸ் சாந்தகுமார்**
*உதவி விரிவுரையாளர், மீன்பிடியியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்.*

நஞ்சின் செறிவுக்கு ஏற்றபடி Collagen நார்கள் வீழ்படிவடைவதுடன் துல்லியமான விளைவை காட்டுவதாகும்.

உலகளாவிய ரீதியில் அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பான் என்பன வர்த்தக ரீதியிலான lysale உற்பத்தியில் ஈடுபட் டுள்ளன. ஒரு குதிரைலாட நண்டு அண்ணளவாக $ 2500 வரை விலைபோகின்றது.

பொருளாதார முக்கியத்துவம் மற்றும் வாழிட மாசுபடலால் அழிவுக்குள்ளாகும் குதிரைலாட நண்டுகளை பாதுகாப்பதற்காக National Institute of Oceanography ஏறத்தாழ 200ml குருதியை ஒரு நண்டிலிருந்து பெற்று மீண்டும் உயிருடன் இயற்கை வாழிடத்தில் விடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இத்துடன் ஒரு நண்டிலிருந்து வருடத்துக்கு 3-4 தடவைகள் lysate ஐ பெறக்கூடியதாய் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

குதிரைலாட நண்டுகளின் குருதியிலிருந்து பெறப்படும் சில நொதியங்கள் சர்வதேச விண்வெளி ஓடத்தின் மேற்பரப்பில் பக்ரீரியா மற்றும் Fungus களின் தொற்றை அறிவதற்காக விஞ்ஞானிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1970களில் ஆரம்பத்தில் விலாங்கு மீன்களை பிடிப்பதற்கான பொறிகளில் இரையாகவும் பயன்படுத்தப்பட்டன.

அத்துடன் குதிரைலாட நண்டுகளின் முட்டையை பிரதான உணவாக உட்கொள்ளும் Retknots எனும் கடற்பறவைகளின் குடித்தொகையை பேணுவதற்கும், இவற்றின் பிரதான இரை கௌவிகளான Logger head turlte ஐ பாதுகாப்பதற்கும் இக்குதிரைலாட நண்டுகளை பாதுகாக்க வேண்டியுள்ளது.

1995இல் 4 வகை horse-shoe-crabஐ பாதுகாக்கவென Ecological Research and Development Group (ERDG) நிறுவப்பட்டது.

எனவே புவியில் தற்போதுள்ள உயிரினங்களுடன் ஒப்பிடுகையில் பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னே தோற்றம் பெற்ற இக்குதிரைலாட நண்டுகளை பேணிப்பாதுகாத்து உயிர்ப்பல்வகைமையைப் பேணுவதுடன் உச்சப் பயனையும் பெற்றுக்கொள்ளலாம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 16

எந்த உயிர் கொல்லி நோயைக் கட்டுப்படுத்த Janos Salks' Vaccine பயன்படுத்தப்படுகிறது?

விடைகளை 17-03-2010 இற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப

வேண்டிய முகவரி: Mr. V. Sendil
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Physics,
University of Jaffna. Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப்பணப் பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மீன்பிடியல் துறையில் கலாநிதி சி. குகநாதனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைகழகம்.

**புதிர் 14க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கோ. ஆனந்தகிருஸ்ணன்
சண்முகம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

**புதிர் 15 இற்கான விடை : கணவாய்**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
## புதிர் இல. 16

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
கையொப்பம் :..........................................

நெருங்கிய நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் துரோகம் செய்பவர்கள் பலர் உள்ளனர். எனவே எச்சரிக்கையாய் விழிப்புடன் வாழுங்கள்.

-மகாபாரதம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இந்து மதத்தை வேரோடு அழிக்கும் மகாபாதகம் நடந்தேறுகின்றது

உலகப் பிரபஞ்சத்தின் அழிவு அதர்மத்தில் எழுவது. அவ்வாறாயின் அதர்மம் என்றால் என்ன? தர்மம் இல்லாத நிலை என்று வெறுமனே சொல்லிவிட முடியாது.

தர்மம் அதர்மத்தின் எதிர்ப்பதம்.

அதர்மமாவது அறம் அழிப்பது. எனவே உலகில் மானிடம் வாழ்வதை எவையெல்லாம் அறுக்கின்றனவோ அவையெல்லாம் அதர்மம் எனலாம்.

பிரபஞ்சத்தில் அதர்மம் அரங்கேறுவதற்கு தர்மம் இடம்கொடுக்காது.

தர்மம் இல்லாவிடில் அதர்மம் மேலோங்கும். இந்த உண்மையையே சனாதனதர்மம் எனப்போற்றப்படும் இந்து சமயம் போதிக்கின்றது.

இருந்தும் இந்து மதத்தின் உயரிய கருத்துக்கள் இன்று கந்தலாக்கப்படும் காரியம் கண்டு மனம் வேகின்றது.

இந்தியத் தென்னாட்டில் சுவாமி நித்தியானந்த பரம்மஹம்சரின் விவகாரம் பெரும்பரபரப்பையும் ஆத்மிகம் பற்றிய எண்ண்க்கருவில் சிதைவையும் ஏற்படுத்திவிட்டது.

நடிகை ஒருவருடன் சுவாமி நித்தியானந்தர் சல்லாபம் புரிந்ததை தமிழகத்தின் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று வெளியிட்டமையே பரபரப்புக்கான காரணம்.

நடிகை ஒருவருடன் சுவாமி நித்தியானந்தர் சல்லாபம் புரிந்தார். இது வெட்கத்திற்குரிய விடயம் எனக்கூறும் குறித்த தொலைக்காட்சி நிறுவனம்,

சுவாமிகள் பற்றிய விவகாரத்தை தொலைக்காட்சியில் வெளியிட்டு உலக இந்துக்களின் மனங்களைப் புண்படுத்தும் பாதகத்தை செய்து விட்டது.

சுவாமி நித்தியானந்தர் நடந்து கொண்டது சரியா தவறா எனப்பட்டிமன்றம் நடத்துவதற்கோ தீர்ப்பு வழங்குவதற்கோ நாம் முன்வரவில்லை.

ஆனால் உலகம் முழுவதும் இலட்சோபலட்ச பக்தர்களை தன் நாவன்மையால்-ஆன்மிகச் சொற்பொழிவால் வழிப்படுத்திய ஒருவரை இந்தளவு தூரம் கேவலப்படுத்துவதன் மூலம் யார் எதைச்சாதிக்க முற்படுகின்றனர் என்பது தெரியாத விடயமாகவே உள்ளது.

தன்னளவில் தவறுவிடுகின்ற ஒருவரிடம் இருந்துகூட நாம் ஞானநல்லறிவை பெறமுடியும்.

சுவாமி நித்தியானந்தரின் போதனையால் திருந்தியவர்கள் ஏராளம். இப்போது நித்தியானந்தரின் விவகாரம் எனக்கூறி தொலைக்காட்சியில் விரசமான் நிகழ்வுகளை ஒளிபரப்பியதன் மூலம் ஏற்கனவே சுவாமிகளின் போதனையால் திருந்தியவர்களை மீளவும் பழைய பாதைக்கு அழைத்து வரும் கொடுமையை குறித்த தொலைக்காட்சி நிலையம் செய்து விட்டது.

எதுவாயினும் சுவாமியின் தவறுகளை சுட்டிக்காட்டியவர்கள் தூய்மையானவர்களா என்பதையும் இந்து மதத்தில் மட்டும்தான் இந்தத் தொலைக்காட்சிகளுக்கு தீனி கிடைக்கின்றதா என்பதையும் ஆழமாகச் சிந்தித்தால்,

இச் சம்பவங்கள் இந்தமதத்தை வேரோடு பிடுங்கி எடுக்கும் பெரும் சதியாகவும், இதற்கு தமிழகத்தின் நாஸ்திகர்கள், மதமாற்ற விரும்பிகள் துணைபோவதையும் கண்டறிய முடியும்.

# இலங்கையில் 50 வீதமான யுத்தமே நிறைவடைந்துள்ளது

## எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் 50 வீதமான யுத்தம் நிறைவடைந்த போதிலும் யுத்தத்திற்கான காரணங்களுக்கு இன்னும் தீர்வு காணப்படாமல் இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உடுதும்பர தொகுதி அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். யுத்தம் முடிவடைந்துள்ளதாக கூறப்படுகின்ற போதும் 50 வீதமே அது முடிவடைந்துள்ளதாக எஸ்.பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களான அதிகாரப் பகிர்வு, தமிழர்களுக்கான சம உரிமை, மொழி தொடர்பான பிரச்சினை, கலாசாரம் தொடர்பான பிரச்சினை, சமயம் தொடர்பான பிரச்சினை மற்றும் அபிவிருத்திகள் என்பன தீர்க்கப்படவில்லை.

கடந்த தேர்தலில் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த சுமார் 6 இலட்சம் பேரில் 2 இலட்சம் பேர் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளனர். அதிலும் 2 இலட்சம் பேர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கோ எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கோ வாக்களிக்கவில்லை.

இது அவர்கள் காட்டும் கோபம் எனக் கொள்ள முடியாது எனக்குறிப்பிட்ட அவர் இலங்கையின் அனைத்து மக்களுடன் இணைந்திருப்பதாக தெரிவித்தார். (ஓ-6)

# ஜெனரல் பொன்சேகாவின் செயலாளர் மீது சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)


பெல்ஜியம் நாட்டில் சட்டவிரோத பணபரிமாற்றல் வழக்கு ஒன்று தொடர்பாக தேடப்பட்டு வந்த ஜெனரல் சரத் பொன்சேகாவின் உதவியாளர் ஒருவர் மீது அந்த நாட்டின் சார்பில் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இரகசிய பொலிஸ் வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே பல குற்றச்சாட்டுகள் தொர்பாக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத்பொன்சேகாவின் ஒருங்கிணைப்புச் செயலாளர் சேனக டீ சில்வா ,இலங்கையில் உள்ள சர்வதேச வங்கி ஒன்றில் இருந்து உள்ளூர் வங்கிக்கு சட்டவிரோதமாக மாற்றியபணத்தை மீளப் பெறுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஊடாக வழக்குத் தாக்கல் செய்வதற்கு என பெல்ஜியம் அதிகாரிகள் விரைவில் இலங்கை வரவிருக்கின்றனர் என்று இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இணையத்தளத்தைப் பயன்படுத்தி குறித்த சட்டவிரோத பணப்பரிமாற்றலை மேற்கொண்டமைக்காக பெல்ஜியத்தில் அவர் சமூகமளிக்காமலே நடத்தப்பட்ட வழக்கு விசாரணைகளை அடுத்து அவருக்கு இரண்டு வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் இலங்கை வெளிவிவகார அமைச்சு இது பற்றித் தெரிவிக்கையில் ,பொன்சேகாவின் உதவியாளரை விசாரிப்பதற்காக அவரை தங்களிடம் ஒப்படைக்குமாறு அந்நாட்டில் இருந்து தங்களுக்கு எதுவித கோரிக்கையும் அனுப்பப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள பெல்ஜியம் தூதுவராலயமும் இந்த விவகாரம் குறித்து தங்கள் நாட்டில் இருந்து தங்களுக்கு எதுவித தகவலும் அனுப்பப்படவில்லை என தெரிவித்துள்ளது. ஜனாதிப்தி மஹிந்த ராஜபக்ஷவையும் அவரது குடும்பத்தினரையும் கொலை செய்ய சதி செய்த குற்றச்சாட் டின்பேரிலும் வேறு பல குற்றச்சாட்டுக்களின் பேரிலும் ஜெனரல் பொன்சேகாவுடன் சேனக டீ சில்வாவும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உருத்ராட்ச ஜெபத்தின் பலன்கள்

பரமேஸ்வரனும், பார்வதி தேவியும் சேர்ந்திருப்பது போல், சேர்ந்திருக்கும் உருத்ராட்சம் கௌரிசங்கரம் ஆகும். இது மிக மிக உயர்ந்தது. பல உருத்ராட்சங்கள் ஒன்று சேர்ந்த மலைக்கு ***கண்டிகை*** என்று பெயர். மோட்சம் வேண்டுவோர் உருத்ராட்சங்களை மேல் நோக்கியும் போகத்தை விரும்புவோர் உருத்ராட்சங்களை கீழ் நோக்கியும் தள்ளி ஜெபிக்க வேண்டும்.

# வெள்ளி நற்சிந்தனை

# பக்தியின் மொழி தமிழ் 113

மனித வாழ்க்கையில் துன்பமின்றி இருக்க என்னவழி? என்பது இன்று எல்லோருடைய தேடலுமாகும். சுக துக்கம், சூழல் சக்கரம் என்பதை நன்கு எல்லோரும் உண்ரும் நிலை இன்று இல்லை. எனவே எமக்குத் துன்பம் வரும்போது அதை எதிர்கொள்ள ஒரு மனப் பக்குவம் தேவை. ஆன்றோர் வாக்கினைச் செவிமடுப்பதால் வழி கிடைக்கும் என மனத்திடமும் இப்போது எவரிடமும் இல்லை. எமது சமயப் பெரியார் இத்தகைய துன்ப நிலையை எதிர்கொள்ள வழி கூறியுள்ளனர். அதனைத் தாம் பாடிய பாடல்களிலே பதிவு செய்தும் வைத்துள்ளனர் . திருநாவுக்கரசு நாயனார் நீண்ட காலம் இவ்வுலகிலே வாழ்ந்தவர் , பல்வேறு துன்பங்களை அனுபவித்தவர், சுடச்சுட ஒளிரும் பொன்போல அவர் அனுபவித்த துன்பங்களின் மூலமாக மனித வாழ்வியலை நன்கு உணர்ந்து கொண்டவர். அவர் அனுபவம் எல்லோருக்கும் பயனுள்ளதாக உள்ளது.

எமது மனத்தைத் திருகும் உணர்வுகளை முதலிலே கட்டுப்பாடு செய்யும் பயிற்சியை மேற்கொள்ளவேண்டும். செம்மை செய்ய வேண்டும். துன்பமில்லாமல் இன்பமாக வாழவேண்டுமாயின் இறைவனிடம் எம்மை ஒப்புவிக்க வேண்டும். இரவும் பகலும் இறைவனை ஏத்திவழிபட வேண்டும்.எமது நாவினாலே நறும்மலச் சேவடி பற்றி ஓயாது பேச வேண்டும். உள்ளத்திலே இறை பற்றிய சிந்தனையை நிறைத்துக்கொள்ள வேண்டும். உள்ளத்திலே வஞ்சமின்றி எப்போதும் இறை வழிபாடு செய்ய வேண்டும்.

எல்லாவற்றையும் மறந்து இறைவா நீயே சரணம் என அடைக்கலமாகி வாழும் வாழ்க்கையே துன்பமில்லாத வாழ்வாகும். உடலை வருத்தும் நோயும் பிணியும் துன்பந்தருபவை. அவற்றிலிருந்து விடுபட வேண்டின் இறைவா எனக் கைதொழுது நிற்க வேண்டும். பஞ்ச பூதங்களின் ஆற்றலாய் நாம் துயரம் அடைகின்றோம். அவற்றின் ஆற்றல் கண்டு அஞ்சுகின்றோம். படைகள் போல எம்மைத் தாக்க வரும் பஞ்சபூதங்களையும் வெல்லும் ஞானவீரம் எமக்குத்தேவை. எதிர்த்து நின்று அவற்றிற்குப் பணியாமல் இறைசிந்தனையோடு தொழிற்படும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இறைவனிடம் நேசமாகி அவனையே எப்போதும் நினைந்து வாழவேண்டும். நமது சுற்றத்தவரிடம் வைத்துள்ள பற்றுக்களைத்துறக்கும் பயிற்சி தேவை. எம்மை விட்டு விலகப்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

போகும் சுற்றங்களையும் உறவையும் நிலையானது என நினைத்து வாழும் வாழ்க்கையை மாற்றிப் பக்தி செய்து வாழும் பயிற்சியே இன்றும் என்றும் எமக்குத் தேவை. உள்ளத்திலே இறைவனையே இருத்தி ஏனைய நினைப்புகளைப் புறந்தள்ளி விட்டால் துயரம் இல்லை. மனித நிலையான இழப்புகளை நினைந்து துயரடைய வேண்டியதில்லை. உள்ளத்திலே இறை சிந்தனையை நினைத்து மட்டும் வாழ்வது என்பது எல்லோருக்கும் கைகூடாது. இறைவன் புகழைப் பாடிப் பரவ வேண்டும். இறையடியார்கள் எல்லோரும் தமது உள்ளத்திலே இறைவன் கோலத்தையும் அருட் குணங்களையும் பற்றி நினைந்து அதனைப் பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளனர். தேவாரங்கள் என இன்று எமக்குக் கிடைக்கும் பாடல்கள் எல்லாம் இத்தகைய வெளிப்பாடே. அப்பாடல்களைப் படிக்கும் போது எமது மனமும் ஒரு பயிற்சியைப் பெறுகிறது.

"துன்பம் இன்றித் துயர் இன்றி என்றும் நீர்
இன்பம் வேண்டின் இராப்பகல் ஏத்துமின்
என் பொன் ஈசன் என்று உள்குவார்க்கு
அன்பனாயிடும் ஆனைக்கா அண்ணலே"



நலன்புரி முகாம்களிலிருந்து வந்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு "EMACE" என்ற தொண்டு நிறுவனத்தினூடாக காலணிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வைப் படங்களில் காணலாம்.

## வேலணைப் பகுதியில் புகையிலை அறுவடை ஆரம்பம்

வேலணைப் பகுதியில் விவசாயிகள் தம்மால் செய்கை பண்ணப்பட்ட புகையிலைகளை அறுவடை செய்யத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக வேலணை வடக்கு, வேலணை மேற்குப் பகுதிகளில் நடுகை செய்யப்பட்ட புகையிலைகளே தற்போது அறுவடை செய்யப்படுகின்றது.

புகையிலை அறுவடை காலம் ஆரம்பிக்கப்பட்டதால் புகையிலையைப் பதனிடப் புகை போடுவதற்குரிய தேங்காய் உரி மட்டை, ஊமல் போன்றவை விலையேறியுள்ளதுடன் சிலர் கொடிகாமம் பகுதியிலிருந்து லான்ட்மாஸ்ரர் மூலம் தீவகத்திற்கு தேங்காய் உரி மட்டை எடுத்து வருகின்றனர். இங்கு ஒரு உரிமட்டை 3 ரூபா தொடக்கம் 5 ரூபா வரையில் விற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-22)

## வலிகாமம் பகுதியில் புராதன இடங்களை பார்வையிடும் தென்பகுதி சுற்றுலா பயணிகள்

(பொன்னாலை)

தென்பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணம் வரும் சுற்றுலாப்பயணிகள் வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசங்களில் அதிகளவில் கூடி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இப்பிரதேசங்களிலுள்ள புராதன இடங்கள், பிரசித்தி பெற்ற ஆலயங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப்பார்வையிட்டுவரும் இவர்கள் இங்குள்ள ஆலயங்கள், பொது இடங்கள் மற்றும் வாடகை வீடுகளில் தங்கிச் செல்வதையும் காண முடிகின்றது.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதிகளிலுள்ள கதிரை மாதா ஆலயம் உள்ளிட்ட பிரசித்திபெற்ற இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள், வரலாறு மையங்கள், புரதான இடங்களையே இவ்வாறு பார்வையிட்டுச் செல்கின்றனர். (ஓ-49)

## தீவகப் பாடசாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனம் உதவி

(வேலணை)

தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட 53 பாடசாலைகளின் தேவைகளுக்காக யுனிசெவ் நிறுவனம் ஒரு தொகுதி பொருட்களை தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஸ்ணனிடம் வழங்கியுள்ளது.

இதில் பாடசாலைகளில் அவசர தேவைக்காக தறப்பாள் (495), வகுப்பறைகளுக்குரிய தண்ணீர் கொள்கலன்கள் (10 லீற்றர் 446), கைகழுவுவதற்குரிய உபகரணங்கள் (100), மலகூட பேசீன் (25), சலகூட பேசீன் (27) என சுமார் 15 வகையான பொருட்களை யுனிசெவ் நிறுவனத்தினர் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-22)

## இலங்கையில் 'இன்புளுவென்ஸா' முழுமையான கட்டுப்பாட்டில்

### பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கையில் இன்புளுவென்ஸா (எச் 1 என் 1) நோய் முழுமையான கட்டுப்பாட்டு நிலையை அடைந்திருப்பதாகச் சுகாதாரப் பராமரிப்பு போஷாக்குத்துறை அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

சுகாதார கல்விப் பணியகமும் ஒக்ஸ்பாம் நிறுவனமும் இணைந்து தயாரித்துள்ள சுகாதார அறிவியல் மேம்பாட்டுக்கான ஊடக ஆவணங்களை வெளியிடும் வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மக்களின் சுகாதார அறிவியல் மேம்பாட்டுக்காக அரசாங்கத்துடன் சேர்ந்து தனியார் நிறுவனங்களும் ஊடகங்களும் பாரிய பங்களிப்புச் செய்து வருகின்றன. இதன் பயனாக மக்கள் மத்தியில் சுகாதார அறிவும் மேம்பட்டிருக்கின்றது. இது நோய்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் பெரிதும் உதவியுள்ளன.

இதேவேளை சார்க் பிராந்தியத்தில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் உயிரிழந்தவர்களும் குறைவான எண்ணிக்கையைக் கொண்ட நாடு இலங்கையே என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரின் அட்டைகள் மீளாய்வு

(பொன்னாலை)

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் பயனாளிகளின் அட்டைகள் மீளாய்வு இம்மாதம் முதல் செய்யப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு உதவிப்பணம் பெறுவோர் உதவிப்பண அட்டை, பங்கீட்டு அட்டை ஆகியவற்றுடன் வருகை தந்து மீளாய்வை மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

பொதுசன மாதாந்த உதவிப்பணம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் இருந்து ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்கப்படவுள்ளதாக சமூக சேவைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-49)

## சோளாவத்தை வீதி திருத்தப்படுகின்றது

(வேலணை)

வேலணை அராலி வெளியிலுள்ள அதிசய வைரவர் கோவிலடியிலிருந்து (தீவக பிரதான வீதியிலிருந்து) சோளாவத்தைக்குச் செல்லும் தரவை வீதி தற்போது கற்கள் பரப்பப்பட்டு திருத்தம் செய்யப்படுகின்றது.

இவ்வீதி செப்பனிடும் பணிகள் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் இவ்வீதி அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் இக்கிராமத்திலுள்ள மக்கள் பயன்பெறுவார்கள். மேலும் இவ்வீதியானது வேலணை பிரதேச சபைக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (4-22)

## அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 21 பேர் கைது

(கொழும்பு)

கடல் வழியாகச் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 21 பேரை விசேட பொலிஸ் குழுவொன்று கைது செய்துள்ளது.

மட்டக்களப்பு, நாவலடிக் கரையோரப் பகுதியில் அமைந்துள்ள பாழடைந்த வீடொன்றில் இருந்தபோது இவர்களைக் கைது செய்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

கடல் வழியைக் குறிக்கும் வரைபடங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள், திசையறி கருவிகள் மற்றும் பெருந்தொகை உலர் உணவு என்பவற்றைப் பொலிசார் இவர்களிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சிலாபம், உடப்பு, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் தங்கியிருந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்வான் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்புப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஓ-4)

## திருட்டுப் பொருட்களை வைத்திருந்த பெண்ணுக்கு ஐந்தாண்டு சிறை

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

இஸ்ரேலிய அருங்காட்சியகத்தில் 27 ஆண்டுகளுக்கு முன் திருட்டுப் போன பொருட்களை வைத்திருந்த பெண்ணுக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் ஜெருசலம் நகரில் இஸ்லாமிய கலை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த கலை நயம்மிக்க 10 கைக்கடிகாரங்கள் உள்ளிட்ட 150 கோடி ரூபா பெறுமான பொருட்கள் கடந்த 1983ஆம் ஆண்டு களவு போய்விட்டன. கடந்த 27 ஆண்டுகளாக இது குறித்து விசாரித்தும் துப்பு துலங்காததால் இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் அருங்காட்சியகத்துக்கு கணிசமான தொகை இழப்பீடு வழங்கப்பட்டது. துப்பறியும் நிறுவனங்கள் மூலம் விசாரித்ததில் நாமன்டில்லர் என்ற நபர் தான் அருங்காட்சியகத்திலிருந்து இந்தப் பொருட்களைத் திருடியுள்ளான். கடந்த 1970ஆம் ஆண்டு டில்லர் நிலி ஷம்ரத் என்ற பெண்ணைக் காதலித்துள்ளான். இரண்டு ஆண்டுகளாக காதலித்த இவர்கள் 72ஆம் ஆண்டுக்குப் பின்னர் சந்தித்து கொள்ளவில்லை.

ஏனென்றால் டில்லர் வேறொரு திருட்டு வழக்கில் சிறைக்குச் சென்றுவிட்டான். இதற்கிடையே 2003ஆம் ஆண்டு ஷம்ரத்தை டில்லர் திருமணம் செய்து கொண்டான். 2004ஆம் ஆண்டு தன்னிடமிருந்த பொருட்களையெல்லாம் ஷம்ரத்துக்கு உயில் எழுதி வைத்துவிட்டு டில்லர் இறந்துவிட்டான். ஜெருசலம் அருங்காட்சியகத்தில் இருந்த பொருட்கள் தற்போது ஷம்ரத்திடம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஷம்ரத் மீது திருட்டு குற்றம் சாட்டப்பட்டு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது தற்போது 64 வயதாகும் ஷம்ரத் 300 மணி நேரம் சமூக சேவையாற்ற வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. (ஓ-4)

## சோமாலியாவில் கடத்தப்பட்டோரை விடுவிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட 13 இலங்கையர்களையும் விடுவிப்பது தொடர்பாகச் சவுதி அரேபியத் தூதரக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அக்கப்பலுடன் தொடர்புடைய வர்த்தக நிறுவனத்துடன் பேசி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜித்தாவிலுள்ள இலங்கைக் கொன்சியுலர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இலங்கைப் பணியாளர்கள் 13 பேரையும் கிரேக்க நாட்டவர் ஒருவரையும் ஏற்றிச் சென்ற *அல் நிஸா அல் சவூதி* என்ற சவூதி அரேபியக் கப்பல் கடந்த திங்கட்கிழமை சோமாலியாவை அண்மித்த ஏடன் குடாப் பகுதியில் கடத்தப்பட்டது.

எரிபொருள் ஏற்றிச் செல்லும் இந்தக் கப்பல் ஜப்பானிலிருந்து சவூதி அரேபியாவின் ஜித்தாத் துறைமுகத்திற்குச் சென்று கொண்டிருந்தபோதே கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ளது. (ஓ-4)

# 2010ஆம் ஆண்டு இறுதியில் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு

## முத்தையா முரளிதரன் முடிவு



(கொழும்பு)

சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து, இந்த வருட இறுதியில் இலங்கை கிரிக்கெட் அணி வீரர் முத்தையா முரளிதரன் ஓய்வுபெற முடிபு செய்துள்ளார்.

சுழற்பந்து ஜாம்பவான் இலங்கை அணியின் முத்தையா முரளிதரன் (வயது 37) இது வரை 132 சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ள இவர் 792 விக்கெட்டுக்கள் வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார். தவிர 334 ஒரு நாள் போட்டிகளில் 512 விக்கெட்டுக்கள் சாய்த்துள்ளார்.

18 ஆண்டுகளாக கிரிக்கெட்டில் சாதித்து வரும் இவர் சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் காயம் காரணமாக பாதியில் திரும்பினார்.

இந்நிலையில் இந்த ஆண்டு ஒக்டோபரில் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மட்டும் இலங்கை அணி பங்கேற்க உள்ளது. இதில் சாதித்து 800ஆவது விக்கெட் வீழ்த்துவதற்கு முரளிதரன் காத்திருக்கிறார்.

பின் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற முடிபு செய்துள்ளார். அதன்பின் இந்திய துணைக்கண்டத்தில் நடக்கும் உலக கோப்பை (50 ஓவர்கள்) தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ளார்.

இது குறித்து முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளதாவது, இன்னும் ஒன்று அல்லது இரண்டு போட்டிகளுடன் டெஸ்ட்கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வுபெற முடிபுசெய்துள்ளேன்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் தான் எனது கடைசி தொடராக இருக்கும். அடுத்து உலக கோப்பை தொடர் வரைக்கும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்பேன். ஒருவேளை இந்த தொடரில் நான் பங்கேற்றால் அத்துடன் ஒருநாள் போட்டிகளில் இருந்தும் ஓய்வுபெற்று விடுவேன்.

இந்திய துணைக்கண்டம் தவிர மற்ற எங்கும் தற்போதைக்கு எங்களுக்கு போட்டிகள் இல்லை. இதனால் மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் நான் உட்பட, இலங்கை வீரர்கள் அனைவரும் கட்டாயம் பங்கேற்பார்கள். ஒரு வேளை இதில் கலந்து கொள்ளவில்லை என்றால் தான் அது மோசம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### ஹோவர்டுக்கு மன்னிப்பு

முரளிதரனின் 'தூஸ்ரா' பந்துவீச்சு குறித்து அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஜோன் ஹோவர்டு கடந்த 2004இல் கேலிசெய்திருந்தார். இது குறித்து முரளிதரன் கூறுகையில்,

அவரது கருத்து குறித்து நான் ஏமாற்றம் அடையவோ கோபப்படவோ இல்லை. அந்த நேரம் என்னுடையதாக இல்லை. ஆனால் இப்போது எல்லாம் முடிந்து விட்டது. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தலைவர் பதவிக்கு வரவுள்ள அவர் துணைக்கண்டத்து நாடுகளை எப்படி நடத்தப்போகிறார் என்று பார்க்க வேண்டும். இது எளிதானது அல்ல என்றார்.

## பாக். பயிற்சியாளராக வக்கார் யூனிஸ்

(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக வக்கார் யூனிஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சமீப காலமாக இன்திகாப் ஆலம் பயிற்சியின் கீழ், பாகிஸ்தான் அணி பெரியளவில் சாதிக்கவில்லை.

இதனால் புதியபயிற்சியாளர் தேர்வு நடந்தது. பலரது பெயர்கள் பரிசீலிக்கப்பட்ட நிலையில், பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வக்கார் யூனிஸ் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வரும் 2011ஆம் ஆண்டு டிசம்பர் வரை இவரை ஒப்பந்தம் செய்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

இதற்கு முன் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சாளர் பயிற்சியாளராக இரண்டு முறை செயற்பட்டுள்ளார் வக்கார் யூனிஸ்.

இது குறித்து யூனிஸ் கூறுகையில், பாகிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளராக செயல்பட, அந்நாட்டுக் கிரிக்கெட் சபையுடன் ஒப்பந்தம் செய்துள்ளேன்.

வரும் ஏப்ரல் மாதத்தில் மேற்கிந்தியத் தீவுகளில் நடக்கவுள்ள இருபது–20 உலகக் கோப்பை முதல் அணிக்கு பயிற்சியளிக்கவுள்ளேன் என்றார்.








யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் அதிபர் வி.மாணிக்கம் விருந்தினர்களை அழைத்துச் செல்வதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் நிறைவேற்று குழு அங்கத்தவர் ரி.சிவநாதன், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வித்தியாலய பழைய மாணவியும் முல்லைத்தீவு அரச அதிபருமான திருமதி எமெல்டா சுகுமார் ஆகியோர் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கேடயங்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# தமிழ் மக்களின் நலன் குறித்து எனது கணவர் நாள்தோறும் சிந்தித்தார்

## ஐ.தே.கட்சி வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலையான சமாதானம் ஏற்பட்டு தமிழ் மக்களின் அன்றாட அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படவேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சியினை ஆட்சி பீடம் ஏற்றுவதே ஒரேவழியாகும்.

இதற்கான பாதையினை யாழ். குடாநாட்டு மக்கள் ஏற்படுத்த வேண்டும். குடாநாட்டு மக்கள் சிந்தித்து உரிய முறையில் வாக்களித்தால் ஐ.தே.கவின் சார்பில் 6 உறுப் பினர்கள் குடாநாட்டில் இருந்து தெரிவாவது உறுதி என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்டத்துக்கான பிரதான வேட்பாளரும் முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் துணைவியாருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏழரை இலட்சமாக இருந்த போதிலும் அங்கு வாழ்பவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. யாழ்ப்பாணத்தில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ளவர்களின் பெருமளவானோர் கொழும்பிலும் நாட்டின் இதர பகுதிகளிலும் இடம்பெயர்ந்து குடியேறியுள்ளனர். இத்தகையவர்கள் நாடாளு




### பொதுத் தேர்தல்–2010

மன்றத் தேர்தலின் போது குடாநாட்டுக்கு வந்து தமது வாக்குகளை அளிக்க வேண்டும். இதன் மூலமே எமது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ். குடாநாட்டு மக்கள் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி திருமதி விஜயகலா மகேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குடாநாட்டு மக்கள் இதுவரை சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்தனர். தற்பொழுதும் குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. எனவே இந்த தேர்தலில் சிந்தித்து வாக்களிப்பதன் மூலமே சுபீட்சமான வாழ்வுக்கு குடாநாட்டு மக்கள் அத்திபாரம் இட முடியும் இது தான் உண்மையும் யதார்த்தமுமாகும்.

மக்கள் வாக்குகளை சிதறடிக்காமல் வாக்களித்து எமது அணியிலிருந்து 6 உறுப்பினர்களை தெரிவுசெய்தால் அது ஆட்சி மாற்றத்துக்கான அத்திபாரமாக அமையும்.

இத்தகைய நிலை ஏற்பட வேண்டுமானால் குடாநாட்டில் உள்ள மக்கள் வாக்களிப்பில் ஆர்வம் காட்ட வேண்டும்.

குடாநாட்டில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் பெருமளவானோர் கொழும்பிலும் நாட்டின் பிறமாவட்டங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இத்தகையவர்கள் சொந்த மண்ணுக்கு வந்து வாக்களிக்க வேண்டும். இதற்கான போக்குவரத்து வசதி களை செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுபவர்கள் அதிக எண்ணிக்கையான தமிழ் உறுப்பினர்கள் யாழ்.குடாநாட்டிலேயே தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கொழும்பில் கூட ஐ.தே.கவின் சார்பில் தமிழ் வேட்பாளர்கள் எவரும் நிறுத்தப்படவில்லை. எனவே யாழ்ப்பாணத்திலிருந்தே ஐ.தே.கவுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்காக எனது கணவர் உயிரை இழந்தார். நான் இன்று அவரைப் பிரிந்து பெரும் துயரத்தில் மீள முடியாது தவிக்கிறேன். எனது நிலையில் குடாநாட்டிலும் ஏனைய பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையான பெண்கள் உள்ளனர்.

எனவே இந்தத் தேர்தலின் பின்னராவது இத்தகையவர்களின் துன்ப துயரங்கள் நீங்க வேண்டும். குடும்பத்தில் கணவனை இழந்த எனக்கு ஏனைய குடும்பங்களில் ஏற்பட்ட இழப்புக்களின் சுமை தெரியும்.

எனவே எனது அணியினரை வெற்றி பெறச் செய்ய சகல மக்களும் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் மக்களின் நலன் குறித்து எனது கணவர் நாள்தோறும் சிந்தித்தார். நாம் தமிழ் மக்களுக்கு துன்பம் ஏற்பட்ட போது அவர்களை விட்டுவிட்டு வெளிநாடு செல்பவர்கள் அல்லர்.

எனவே மக்கள் இம் முறை சிந்தித்து வாக்களிக்க வேண்டும். 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நாம் விட்ட தவறை இன்று உணர்கிறோம். அதேபோன்று இம்முறைத் தேர்தலிலும் குடா நாட்டு தமிழ் மக்கள் தவறிழைத்து விடக்கூடாது என விநயமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**நடுநிலையோடு செயற்படும் வலம்புரி நாளிதழ் அனைத்துக் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களினதும் கருத்துக்களை பொதுமக்களுக்கு வழங்க இப் பகுதியில் சந்தர்ப்பம் அளிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ–ர்)**

சநகர சபை, யாழ்ப்பாணம்.



உடல் நலக் குறைவு காரணமாக கொழும்பு தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ நேற்று நேரில் சென்று பார்வையிட்டு நலம் விசாரிப்பதைப் படத்தில் காணலாம்.



## இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை அதிபர் திருமதி த.அ.துரைசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் வை.தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக வலம்புரி நாளிதழின் நிர்வாக இயக்குநர் சி.வெற்றிவேலாயுதமும் கலந்து கொள்வர்.

இவ் மெய்வல்லுநர் போட்டியில் பாடசாலையின் பழைய மாணவர்களையும் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ந-3)

# கட்சிகளுக்குள் நடைபெறும் வன்முறைகள் பொதுத் தேர்தலில் அதிகரிப்பு

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் பிரசாரங்களின் போது அரசியல் கட்சிகளுக்குள்ளேயே அதிக வன்முறைகள் இடம்பெறலாம் என்பதால் கட்சித் தலைவர்கள் அதனைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சுயாதீனமானதும் நியாயமானதுமான தேர்தல் மக்கள் நடவடிக்கை அமைப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை வரை தேர்தல் தொடர்பாக 9 வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. இந்த வன்முறைகளில் 5 வன்முறைகள் ஒரே கட்சி உறுப்பினர்களிடையே நடைபெற்றுள்ளதாகவும் அவ் அமைப்புத் தெரிவித்துள்ளது. (ச-5)

## இந்திய வெளியுறவுச் செயலர்...

தமிழர் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை, அதிகாரப் பரவலாக்கல் யோசனைத் திட்டம்ஒன்றை முன்வைக்குமாறு கொழும்புக்குப் புதுடில்லி அழுத்தம் கொடுத்து வருகையில்,

இந்தியத் தூதுவரின் கொழும்பு வருகை இடம்பெறுகின்றமை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இந்திய வெளிவிவகாரச் செயலரின் வருகை வழமையான இருதரப்பு பரஸ்பர நலன் நோக்கிய உறவாடல் தொடர்பானதே என அதிகாரிகள் மட்டத்தில் கூறப்பட்டது.

எனினும் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தீர்க்கமான சில கொள்கை முடிபுகள். குறித்துப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் அரசு கோடி காட்ட வேண்டும் எனப் புதுடில்லி கருதுகின்றது.

புதுடில்லியின் இந்த நிலைப்பாட்டை நிருபமா ராவ் தனது விஜயத்தின் போது இங்குள்ள அதிகார வர்க்கத்திடம் அழுத்தம் திருத்தமாகத் தெரியப்படுத்துவார் என இந்தியத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவரது விஜயத்தையொட்டி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவரது விஜயம் தொடர்பான நிகழ்ச்சி நிரல் இன்று பூர்த்தி செய்யப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

## ஜனாதிபதி...

ஆண்டு மகிந்த ராஜபக்ஷ முதல் தடவையாக ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக் கொண்டார். இதன் பின்னர் தமது முதலாவது பதவிக் காலம் முடிபடைவதற்கு முன்னரேயே அவர் ஜனாதிபதித் தேர்தலைக் கடந்த ஜனவரி மாதத்தில் நடத்தி அதில் வெற்றியைப் பெற்றார்.

இந் நிலையில் இலங்கையின் உயர் நீதிமன்ற ஆலோசனையின் அடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி அவர் 2-வது தவணைக்காகப் பதவியேற்கவுள்ளார்.

அவர் பதவியேற்கும் காலத்திலிருந்து 6 வருடங்களுக்கு ஜனாதிபதியாகப் பதவி வகிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## அவசரகாலச் சட்ட நீடிப்பை...

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளைக் கொண்ட எமது முன்னணி அவசர காலச் சட்ட நீடிப்பை எதிர்க்கும்.

நாட்டின் வேறு பல முக்கிய பிரச்சினைகள் உள்ளபோது ,அரசு ஏன் அவசர காலச் சட்டத்தை நீடிப்பதில் குறியாகவுள்ளது என்பதை நாம் அறிவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்தில் ஜே.வி.பி. கட்சியும் பங்குபற்றவுள்ளபோதும் அதனை எதிர்ப்பது தொடர்பில் ஜே.வி.பி. இதுவரை முடிபு எதனையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தமது கட்சி கூடி முடிபெடுக்கவுள்ளதாக அதன் உறுப்பினர் அனுர குமாரதிஸநாயக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் சமயத்தில் அவசர காலச் சட்டம் நீடிப்பதை இரு பிரதான எதிர்க்கட்சிகளும் எதிர்த்து வருகின்றன.

அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிப்பது தொடர்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கொழும்பு...

கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை கொழும்பு மாவட்டத்திற்காக அச்சிடும் வாக்காளர் சீட்டின் நீளம் 2 அடி 6 அங்குலமாகக் காணப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் வாக்குச் சீட்டை அச்சிடுவதற்கு இதுவரை எந்தவிதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை. ஏனெனில் அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றமையாகும் என அவர் கூறினார். (ச-9)

## இராணுவ விதிகளை மீறியமைக்...

முயற்சிகளை மேற்கொண்டாலோ அல்லது இராணுவ விதிகளை மீறினாலோ அவர்கள் மீது நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

அவர்கள் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்று நீண்ட காலமாக இருந்தாலும் அதனை மேற்கொள்ள முடியும். மிகவும் மூத்த அதிகாரி ஒருவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டால் அவரை விசாரணை செய்வதற்கு அவரின் பதவி நிலையை விட குறைந்தவர்களை நியமிப்பதற்கான சட்டங்களும் இராணுவச் சட்டங்களில் உண்டு.

ஜெனரல் பொன்சேகா மீதான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவை மகிந்த ராஜபக்ஷ விரைவில் அமைப்பார்.

அது மூவர் அல்லது ஐந்து பேர் கொண்ட குழுவாக இருக்கும் என மேலும் தெரிவித்துள்ளார். 1981-1998 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிகளில் சமரக்கோன் இராணுவ நீதிமன்ற விசாரணைக்குழுவில் இடம் பெற்றிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அறிவிக்கப்பட்டவாறு சம்பள...

திபதித் தேர்தலின்போது உறுதியளிக்கப்பட்டது.

ஆயினும் ஜனவரி மாத இறுதியில் நிலுவைச் சம்பளம் 2 ஆயிரத்து 500 ரூபாயாக வழங்கப்படவில்லை. பதவிக்குத் தெரிவான உடனேயே அதனைச் செலுத்த நேரமில்லை என சிலர் கூறுவதாக அவர் தெரிவித்தார்.

பெப்ரவரி மாதத்தில் அந்தத் தொகை கிடைக்கும் என பெரும்பாலானவர்கள் எதிர் பார்த்திருந்த போதிலும் அந்த மாதமும் கடந்து விட்ட நிலையில் 2 ஆயிரத்து 500 ரூபாயை எவராலும் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்க முடியாதுள்ளபோதும் சகல அமைச்சர்களினதும் சம்பளத்தை 70 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயாக கடந்த வருடத்தில் அதிகரித்துக் கொண்டுள்ளணர் எனவும் அவர் இதன்போது மேலும் கூறினார். (ச-3)

## இலங்கைக்கு உதவி வழங்கலில்...

போன்றவற்றைப் பின்தள்ளியுள்ளது.

இலங்கையின் வீதி அபிவிருத்தி, அனல் மின் உற்பத்தி ஆகிய துறைகளுக்குக் கடந்த வருடம் சீனா 1.2 பில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது.

2009 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு உதவியான 2.2 பில்லியன் டொலர்களில் அரைவாசிக்கு மேற்பட்டதை சீனாவே வழங்கியுள்ளது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 1.9 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ள சீனா 279.6 மில்லியன் டொலர்களை அன்பளிப்பாகவும் வழங்கியுள்ளதாக அவை மேலும் தெரிவித்துள்ளன. (ச-5)

## யுத்தக் குற்றச் செயல்...

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 13-வது கூட்டத் தொடரில் மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அதன் வருடாந்த அறிக்கையை நேற்று சமர்ப்பித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் அமைதியையும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கப்பாட்டையும் உருவாக்குவதற்கு கிடைத்த சந்தர்ப்பமானது அரசின் நடவடிக்கைகளால் தொடர்ந்து புறந்தள்ளப்பட்டு வருகின்றது.


அங்கு ஊடகவியலாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், அரசை விமர்சிப்பவர்கள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அமைதியை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களை இல்லாது செய்துள்ளன.

போரின்போது எல்லாத் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசு முழுமையான விசாரணைகள்ள மேற்கொள்ள வேண்டும். அது தொடர்பில் அனைத்துலக சமூகமும் தனது உதவிகளை வழங்க வேண்டும் என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வருடாந்தக் கூட்டத் தொடர் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக !!!
Adobe
கணனி வரை கலை தொழில் நுட்ப கற்கைநெறி ஆரம்பம் -Online Class
Advanced Diploma in Adobe Illustrator
இக் கற்கை நெறியானது சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியை கற்ற, கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் மற்றும் சித்திர பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மிகவும் பயனுள்ள கற்கைநெறி !!!
இந்தியாவில் இருந்து வருகை தரும் விரிவுரையாளரால் வகுப்புகள் நடாத்தப்படும்.
- காலம் 2 மாதங்கள் -
பதிவுகளை :- 10/03/2010 முன்னர் மேற்கொள்ளவும் !!
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862
(அ-4549)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010
தமிழ் தேசியக் கூட்டமைப்பு
வலி தந்தாரை தோற்கடிப்போம்-நம் விதி வெல்ல வாக்களிப்போம்
X
10 X
இலங்கைத் தமிழரசுக் கட்சி
சிவஞானம் சிறீதரன்
கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரர்) அதிபர்
(அ-4558)



இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.03. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.